12

# டால்பின்®

உன்னால் முடியும்

புதிய பதிப்பு

# தமிழ்

**PTA, அரசுத்தேர்வு வினாக்களுக்குரிய விடைகள் இணைக்கப்பட்டுள்ளன**



100
100
உறுதி

டால்பின் பப்ளிகேசன்ஸ்®

# 12 டால்பின்®

## உன்னால் முடியும்

# தமிழ்

**புதிய பதிப்பு**

**சிறப்பு அம்சங்கள்**

- பாட நூலின் வினா- விடைத்தொகுப்பு
- கூடுதல் வினா- விடைத்தொகுப்பு
- பெற்றோர் ஆசிரியர் கழக (PTA) வினா- விடைத்தொகுப்பு
- அரசுத் தேர்வு வினா - விடைத் தொகுப்பு


நூலாசிரியர்
குருசடி எம்.ஏ.ஜெலஸ்டின் எம்.ஏ,பி.எட்,எம்.பில்,
முதுகலைத் தமிழாசிரியர்
கார்மல் மேல்நிலைப்பள்ளி, நாகர்கோவில்.



98653 06197 | 89256 77710 | 99435 67646
டால்பின் பப்ளிகேசன்ஸ்®
தரமே எங்களின் தாரக மந்திரம்
239, கீழப்பட்டித்தெரு, ஸ்ரீவில்லிபுத்தூர் - 626 125, விருதுநகர் மாவட்டம். த.நா.
Mail us : dolphin.pub2005@gmail.com | Visit us : www.kalvidolphin.com



© All Copyrights reserved


விலை : ரூ.252

# பதிப்புரை

அன்புமிகு மாணவச் செல்வங்களே

வாழ்வு எனும் பாதையில் – இது
வசந்தகாலப் பருவம் – நீங்கள்
பள்ளிச்சாலையில் நல்ல பயணம் மேற்கொண்டு
வாழ்வில் வசந்தத்தை உணர்த்திட
கற்றல் உங்களுக்கு அவசிய மாகும்.....
கற்றிட இந்நூல் உங்களுக்கு உதவும்....

உங்கள் கரங்களில் தவழும் **12 ஆம் வகுப்பு டால்பின் உன்னால் முடியும்** துணைவன் தமிழக அரசின் புதிய பாடத்திட்டத்தின்படி புதிய வினாத்தாளைக் கருத்தில் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்நூலில் ஒவ்வொரு இயலிலும் உள்ள செய்யுள், உரைநடை, துணைப்பாடம், இலக்கணம் ஆகிய பகுதிகளில் எளிதில் புரியும் விதத்தில் வினா விடைகளும், புரிந்து எழுதும் கேள்விகளும், பொதுத் தேர்விற்கான வினாத்தாளில் இடம்பெறும் வினாவடிவமைப்பிற்கு ஏற்ப ஒரு மதிப்பெண் வினாக்களும், மொழிப்பயிற்சி வினாக்களும் உரிய விடைகளுடன் கொடுக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு இயல் முடிவிலும் அந்தந்த இயலுக்குரிய மொழிப்பயிற்சிகளும், பின்பகுதியில் சிறப்பு மொழிப்பயிற்சி வினாக்கள் விடைகளுடன் கொடுக்கப்பட்டுள்ளன. இந்நூலைக் கற்பதால் மாணாக்கர்கள் தேர்வில் சிறந்த மதிப்பெண்கள் பெற எளிதாக இருக்கும்.....!

அறிவார்ந்த மாணவச் செல்வங்களே !

நீங்கள் கற்று வாழ்வில் உயர்ந்திட
எங்கள் டால்பின் உன்னால் முடியும் துணைவன் மூலம்
உங்கள் அனைவரையும் வாழ்த்துகின்றோம்....!

**வேரின் வெற்றி ; பூவின் மகிழச்சியாகும் ;**
**உங்களின் வெற்றி எங்களுக்கு மகிழ்ச்சியாகும்..........**

வாழ்த்துக்களுடன்
டால்பின் பதிப்பகத்தார்.

## புத்தகங்களைப் பெறுவதற்கு

**மரியாதைக்குரிய தலைமையாசிரியர்கள் / ஆசிரியைகள் மற்றும் ஆசிரியப் பெருந்தகைகளுக்கு !**

வணக்கம். **டால்பின் பப்ளிகேஷன்ஸ்** நிறுவனத்திற்கு தாங்கள் வழங்கி வருகின்ற பேராதரவிற்கு எங்களின் சிரம்தாழ்ந்த நன்றிகள். நீங்களே எங்களின் வளர்ச்சியின் அடித்தளம். தற்பொழுது தாங்கள் தங்களுக்குத் தேவையான புத்தகங்களை பின்வரும் வழிமுறைகளைப் பின்பற்றி பெற்றுக்கொள்ளலாம்.

**புத்தகங்களைப் பெற**

| | |
|---|---|
| அலைபேசி எண் (Mobile No) | **: 9865306197 / 8925677710 / 9943567646** |
| கட்செவி எண் (Whatsapp No) | **: 9345314146** |
| குறுஞ்செய்தி (Sms) | **: 9345330937** |
| வலைதளம் (Website) | **: www.kalvidolphin.com** |
| மின்னஞ்சல் (E-mail ID) | **: dolphin.pub2005@gmail.com** |

## பணம் செலுத்துவதற்கான விவரங்கள்

**கேட்பு வரைவோலை (D.D.) அல்லது காசோலை (Cheque) :**

டால்பின் பப்ளிகேஷன்ஸ் - ஸ்ரீவில்லிபுத்தூர் **(DOLPHIN PUBLICATIONS, SRIVILLIPUTTUR)** என்ற பெயருக்கு எடுத்து அனுப்பவும்.

## வங்கி கணக்கு விவரங்கள்

Karur Vysya Bank
DOLPHIN PUBLICATIONS
SCAN & PAY WITH ANY UPI APP
wipos.2753796a@kvb
TID: 2753796A

ICICI Bank iMobile
Merchant Name: DOLPHIN PUBLICATIONS
Mobile Number : 8668163362
Steps to Pay UPI QR Code
Open UPI app > Select Tap to Pay > Scan QR Code > Enter Amount

CITY UNION BANK
DOLPHIN PUBLICATIONS
MID: E01020101079104
SCAN & PAY
UPI ID:CFST20003166@CUB
328:SRIVILLIPUTHUR

**G Pay 63743 17883**

| **KARUR VYSYA BANK** | **CITY UNION BANK** |
|---|---|
| A/C No : 1804135000006000 | A/C No : 328109000204092 |
| IFSC CODE : KVBL0001804 | IFSC CODE : CIUB0000328 |
| BRANCH : Srivilliputtur | BRANCH : Srivilliputtur |
| **ICICI BANK** | **TAMILNADU MERCANTILE BANK** |
| A/C No : 446005500030 | A/C No : 328150310875103 |
| IFSC CODE : ICIC0004460 | IFSC CODE : TMBL0000328 |
| BRANCH : Srivilliputtur | BRANCH : Srivilliputtur |

**பணம் செலுத்திய பின் கீழ்க்கண்ட தொலைபேசி எண்களில் கண்டிப்பாக தகவல் தெரிவிக்கவும்**

**98653 06197, 89256 77710, 99435 67646**

# பொருளடக்கம்


| இயல் | பொருளடக்கம் | | பாடத்தலைப்புகள் | பக்க எண். |
|---|---|---|---|---|
| | நூலும் ஆசிரியரும் | | | vii |
| | மனப்பாடப் பகுதிகள் | | | viii |
| 1. | மொழி, கலை | உயிரினும் ஓம்பப்படும் | | 1 |
| | | செய்யுள் | தன்னேர் இலாத தமிழ் ✶ | 21 |
| | | உரைநடை | நமது மொழியின் அடையாளங்களை மீட்டவர் | 23 |
| | | செய்யுள் | இளந்தமிழே! | 28 |
| | | துணைப்பாடம் | தம்பி நெல்லையப்பருக்கு | 31 |
| | | இலக்கணம் | தமிழாய் எழுதுவோம் | 34 |
| 2. | இயற்கை, வேளாண்மை, சுற்றுச்சூழல் | பெய்யெனப் பெய்யும் மழை | | 35 |
| | | வாழ்வியல் | திருக்குறள் ✶ | 56 |
| | | உரைநடை | மதராசப்பட்டினம் | 63 |
| | | செய்யுள் | பிறகொரு நாள் கோடை | 69 |
| | | செய்யுள் | நெடுநல்வாடை ✶ | 71 |
| | | துணைப்பாடம் | முதல்கல் | 75 |
| | | இலக்கணம் | நால்வகைப் பொருத்தங்கள் | 77 |
| | | வாழ்வியல் | திருக்குறள் ✶ | 79 |

| இயல் | பொருளடக்கம் | | பாடத்தலைப்புகள் | பக்க எண். |
|---|---|---|---|---|
| 3. | பண்பாடு | சுற்றத்தார் கண்ணே உள | | 88 |
| | | உரைநடை | தமிழர் குடும்ப முறை | 110 |
| | | செய்யுள் | விருந்தினர் இல்லம் | 117 |
| | | செய்யுள் | கம்பராமாயணம் ✶ | 120 |
| | | துணைப்பாடம் | உரிமைத்தாகம் | 127 |
| | | இலக்கணம் | பொருள் மயக்கம் | 131 |
| 4. | கல்வி, அழகியல் | செல்வத்துள் எல்லாம் தலை | | 134 |
| | | வாழ்வியல் | திருக்குறள் ✶ | 154 |
| | | உரைநடை | பண்டைய காலத்துப் பள்ளிக்கூடங்கள் | 164 |
| | | செய்யுள் | நகுலன் கவிதைகள் | 171 |
| | | செய்யுள் | காவியம் ✶ | 173 |
| | | செய்யுள் | சிலப்பதிகாரம் ✶ | 174 |
| | | துணைப்பாடம் | சூரியனைப் பிரசவிக்கும் பாறை | 180 |
| | | இலக்கணம் | மெய்ப்பாடு | 181 |
| | | வாழ்வியல் | திருக்குறள் ✶ | 182 |
| 5. | நாகரிகம், தொழில், வணிகம், ஆளுமை | அருமை உடைய செயல் | | 185 |
| | | உரைநடை | திரைமொழி | 203 |
| | | செய்யுள் | தெய்வமணிமாலை ✶ | 209 |
| | | செய்யுள் | பெருமாள் திருமொழி | 212 |
| | | செய்யுள் | தேவாரம் | 215 |
| | | துணைப்பாடம் | நடிகர் திலகம் | 218 |

| இயல் | பொருளடக்கம் | | பாடத்தலைப்புகள் | பக்க எண். |
|---|---|---|---|---|
| | | இலக்கணம் | படைப்பாக்க உத்திகள் | 221 |
| 6. | நாடு, சமூகம், நிருவாகம், மனிதம் | எல்லா உயிரும் தொழும் | | 227 |
| | | உரைநடை | இலக்கியத்தில் மேலாண்மை | 247 |
| | | செய்யுள் | இரட்சணிய யாத்திரிகம் ✶ | 253 |
| | | செய்யுள் | புறநானூறு | 256 |
| | | செய்யுள் | கோடை மழை | 258 |
| | | இலக்கணம் | தொன்மம் | 260 |
| | | பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள இலக்கணக்குறிப்பு | | 264 |
| | | பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள உறுப்பிலக்கணம் | | 266 |
| | | பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள புணர்ச்சி விதி | | 270 |
| | அணி, திணை, துறை, கூற்று | பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள அணி இலக்கணம் | | 274 |
| | | பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள திணைகள் | | 277 |
| | | பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள துறைகள் | | 278 |
| | பழமொழிகள் | பழமொழிகளை வாழ்வியல் நிகழ்வில் அமைத்து எழுதுதல் | | 278 |
| | | வினா வங்கி | | 290 |


**✶ (பெ.ஆ.க -பெற்றோர் ஆசிரியர் கழகம்)**

# நூலும், ஆசிரியரும்

| செய்யுள் / கவிதைப்பேழை | | |
|---|---|---|
| 1. | தன்னேர் இலாத தமிழ் | தண்டி |
| 2. | இளந்தமிழே | சிற்பி பாலசுப்பிரமணியம் |
| 3. | பிறகொரு நாள் கோடை | அய்யப்ப மாதவன் |
| 4. | நெடுநல்வாடை | நக்கீரர் |
| 5. | விருந்தினர் இல்லம் | ஜலாலுத்தீன் ரூமி |
| 6. | கம்பராமாயணம் | கம்பர் |
| 7. | நகுலன் கவிதைகள் | நகுலன் |
| 8. | காவியம் | பிரமிள் |
| 9. | சிலப்பதிகாரம் | இளங்கோவடிகள் |
| 10. | தெய்வமணிமாலை | இராமலிங்க அடிகள் |
| 11. | பெருமாள் திருமொழி | குலசேகராழ்வார் |
| 12. | தேவாரம் | திருஞானசம்பந்தர் |
| 13. | இரட்சணிய யாத்திரிகம் | எச்.ஏ.கிருட்டினனார் |
| 14. | புறநானூறு | கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி |
| 15. | திருக்குறள் | திருவள்ளுவர் |

| உரைநடை | | |
|---|---|---|
| 1. | தமிழர் குடும்ப முறை | பக்தவச்சல பாரதி |
| 2. | பண்டைய காலத்துப் பள்ளிக்கூடங்கள் | உ.வே.சாமிநாதர் |
| 3. | இலக்கியத்தில் மேலாண்மை | வெ.இறையன்பு இ.ஆ.ப. |

| விரிவானம் / துணைப்பாடம் | | |
|---|---|---|
| 1. | தம்பி நெல்லையப்பருக்கு (பாரதியின் கடிதம்) | பாரதியார் |
| 2. | முதல்கல் | உத்தமசோழன் |
| 3. | உரிமைத்தாகம் | பூமணி |
| 4. | சூரியனைப் பிரசவிக்கும் பாறை | தோப்பில் முகமது மீரான் |
| 5. | நடிகர் திலகம் | பாலச்சந்திரன் சுள்ளிக்காடு |
| 6. | கோடை மழை | சாந்தா தத் |

# மனப்பாடப் பகுதிகள்

## இயல் - 1

### தன்னேர் இலாத தமிழ்

ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத்(து) இருளகற்றும் -ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரொன்(று) ஏனையது
தன்னேர் இலாத தமிழ்! - தண்டி **(செப்.20, ஜீன்.23, மார்ச்.25)**

---

## இயல் - 2

### நெடுநல்வாடை

மாமேயல் மறப்ப மந்தி கூரப்
பறவை படிவன வீழக் கறவை
கன்றுகோள் ஒழியக் கடிய வீசிக்
குன்று குளிர்ப்பன்ன கூதிர்ப் பானாள்

-நக்கீரர் **(பெ.ஆ.க.3)**

---

## திருக்குறள்

### இல்வாழ்க்கை

1. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
   பண்பும் பயனும் அது.

3. வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்
   தெய்வத்துள் வைக்கப் படும். **(செப்-21)**

---

### செய்ந்நன்றி அறிதல்

4. செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்
   வானகமும் ஆற்ற லரிது. **(மே.2022)**

8. நன்றி மறப்பது நன்றன்று; நன்றல்ல(து)
   அன்றே மறப்பது நன்று. **(பெ.ஆ.க.2)**

9. எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்; உய்வில்லை
   செய்ந்நன்றி கொன்ற மகற்கு. **(பெ.ஆ.க.4,6)**

---

## வெகுளாமை

17. தன்னைத்தான் காக்கின் சினம்காக்க; காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம். **(மார்ச்.23)**

18. சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்
ஏமப் புணையைச் சுடும். **(ஆகஸ்ட்.22)**

---

## ஊழ்

19. நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றும்தன்
உண்மை அறிவே மிகும். - **திருவள்ளுவர்** **(பெ.ஆ.க.5)**

---

# இயல் - 3

## கம்பராமாயணம்

2. ‘துன்பு உளதுஎனின் அன்றோ
சுகம் உளது? அது அன்றிப்
பின்பு உளது; இடை மன்னும்
பிரிவு உளது என உன்னேல்;
முன்பு உளெம் ஒரு நால்வேம்
முடிவு உளது என உன்னா
அன்பு உள, இனி, நாம் ஓர்
ஐவர்கள் உளர் ஆனோம்

**(பெ.ஆ.க.1, மார்ச்.20)**

9. குகனொடும் ஐவர் ஆனேம்
முன்பு; பின்குன்று சூழ்வான்
மகனொடும் அறுவர் ஆனேம்;
எம்முழை அன்பின் வந்த
அகன்அமர் காதல் ஐய!
நின்னொடும் எழுவர் ஆனேம்;
புகல்அருங் கானம் தந்து,
புதல்வரால் பொலிந்தான் நுந்தை.

- கம்பர்

---

# இயல் - 4

## காவியம்

சிறகிலிருந்து பிரிந்த
இறகு ஒன்று
காற்றின் தீராத பக்கங்களில்
ஒரு பறவையின் வாழ்வை
எழுதிச் செல்கிறது.

- பிரமிள்

## சிலப்பதிகாரம்

குழல்வழி நின்றது யாழே, யாழ்வழித்
தண்ணுமை நின்றது தகவே, தண்ணுமைப்
பின்வழி நின்றது முழவே, முழவொடு
கூடி நின்று இசைத்தது ஆமந்திரிகை (139-142)

- இளங்கோவடிகள் **(பெ.ஆ.க.5, ஆகஸ்ட்.22)**

# திருக்குறள்

## அறிவு உடைமை

3. எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு. **(பெ.ஆ.க.1,3)**

5. எதிரதாக் காக்கும் அறிவினார்க்கு இல்லை
அதிர வருவதோர் நோய். **(செப்.20)**

## வினைத்திட்பம்

8. வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்
மற்றைய எல்லாம் பிற.

9. சொல்லுதல் யார்க்கும் எளிய; அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல். **(மார்ச்.20)**

11. உருவுகண்(டு) எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்(கு)
அச்சாணி அன்னார் உடைத்து. **(ஜீன்.23)**

### உட்பகை

15. வாள்போல் பகைவரை அஞ்சற்க; அஞ்சுக
    கேள்போல் பகைவர் தொடர்பு.

### கள் உண்ணாமை

17. துஞ்சினார் செத்தாரின் வேறுஅல்லர் எஞ்ஞான்றும்
    நஞ்சுஉண்பார் கள்உண் பவர்.

### சூது

19. சிறுமை பலசெய்து சீர்அழிக்கும் சூதின்
    வறுமை தருவதுஒன்று இல். **- திருவள்ளுவர்**

## இயல் - 5

### தெய்வமணிமாலை

ஒருமையுடன் நினதுதிரு மலரடி நினைக்கின்ற
உத்தமர்தம் உறவுவேண்டும்
உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்
உறவுகல வாமைவேண்டும்
பெருமைபெறு நினதுபுகழ் பேசவேண்டும் பொய்மை
பேசா திருக்கவேண்டும்
பெருநெறி பிடித்தொழுக வேண்டும் மதமானபேய்
பிடியா திருக்கவேண்டும்.

- இராமலிங்க அடிகள் **(பெ.ஆ.க.2, செப்-21, மார்ச்.23)**

## இயல் - 6

### இரட்சணிய யாத்திரிகம்

2. பாதகர் குழுமிச் சொற்ற பழிப்புரை என்னும் கொள்ளி
   ஏதமில் கருணைப் பெம்மான் இருதயத்து ஊன்ற ஊன்ற
   வேதனை உழந்து சிந்தை வெந்து புண்பட்டார் அல்லால்
   நோதகச் சினந்தோர் மாற்ற நுவன்றிலர் கரும நோக்கி.

- எச்.ஏ.கிருட்டிணனார் **(பெ.ஆ.க.4,6)**






எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு!
எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்
இங்குள்ள தமிழர் ஒன்றாதல் கண்டே!

\- பாரதிதாசன்

# இயல் 1 உயிரினும் ஓம்பப் படும்

*மொழி, கலை*



இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய தமிழ் – பிராமி எழுத்துகள் பொறிக்கப்பட்ட பாறை, மாங்குளம், மதுரை.

## கற்றல் நோக்கங்கள்

- உரைநடை, பாடல், கடிதம் போன்ற வடிவங்களில் மொழி கையாளப்படும் தன்மையைப் படித்துப் புரிந்துகொண்டு தமக்கான கருத்து வெளிப்பாட்டுத் தன்மையை உருவாக்குதல்.
- வெவ்வேறு காலக்கட்டங்களில் மொழியின் சிறப்பு கூறப்பட்டுள்ள செய்யுள் / பாடல் கருத்துகளைத் தெரிந்துகொண்டு பேச்சிலும் எழுத்திலும் பயன்படுத்துதல்.
- கட்டுரை வாயிலாக மொழியின் செறிவை அறிந்து எழுத்தில் வெளிப்படுத்துதல்.
- கடிதம் எழுதப்பட்ட காலத்தின் சமூகநிலைகளையும் மொழியின் தொடர் அமைப்புகளையும் படித்தறிந்து பின்பற்றுதல்.
- மொழியைப் பிழையின்றிக் கையாளும் முறையறிந்து பயன்படுத்துதல்.

## பாடப்பகுதிகள்

- செய்யுள் – தன்னேர் இலாத தமிழ்
- உரைநடை – நமது மொழியின் அடையாளங்களை மீட்டவர்
- செய்யுள் – இளந்தமிழே!
- துணைப்பாடம் – தம்பி நெல்லையப்பருக்கு
- இலக்கணம் – தமிழாய் எழுதுவோம்

## இலக்கணத் தேர்ச்சி கொள் (பக்கம்.16)

1. **பிழையான தொடரைக் கண்டறிக.** **(பெ.ஆ.க-2,6, ஆகஸ்ட்.22, மார்ச்.24)**

அ) காளைகளைப் பூட்டி வயலை உழுதனர் ஆ) மலைமீது ஏறிக் கல்வெட்டுகளைக் கண்டறிந்தனர்.

இ) காளையில் பூத்த மல்லிகை மனம் வீசியது ஈ) நெற்பயிர்கள் மழைநீரில் மூழ்கின.

**[இ) காளையில் பூத்த மல்லிகை மனம் வீசியது]**

2. **பேச்சுத்தமிழில் அமைந்த தொடரைத் தெரிவு செய்க.** **(செப்.20, ஆகஸ்ட்.22)**

அ) அவருக்கு நல்லது கெட்டது நல்லாத் தெரியும் ஆ) புத்தகக் கண்காட்சி நடைபெறுகிறது

இ) வறட்சி எல்லா இடங்களையும் பாதித்துள்ளது ஈ) மயில்கள் விறலியரைப் போல் ஆடுகின்றன

**[அ) அவருக்கு நல்லது கெட்டது நல்லாத் தெரியும்]**

3. **முடிந்தால் தரலாம், முடித்தால் தரலாம் - இவ்விரு சொற்றொடர்கள் உணர்த்தும் பொருளை அறிந்து தொடர் அமைக்க.** **(ஆகஸ்ட்.22, ஜீன்.23, மார்ச்.25)**

**முடிந்தால் தரலாம்:**

ஒரு பொருளைக் கொடுக்க முடிந்தால் கொடுக்கலாம் என்ற பொருளைத் தருகின்றது.

**முடித்தால் தரலாம்:**

தரப்பட்டுள்ள வேலையை முடித்துவிட்டேன் என்றால் தரலாம் என்ற பொருளைத் தருகின்றது.

**தொடர்கள்:**

- மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவைப்படும் பொருட்களை <u>முடிந்தால் தரலாம்.</u>
- ஆசிரியர் கூறியபடி செயல்திட்டப் பதிவேடுகளை <u>முடித்தால் தரலாம்.</u>

4. **தமிழில் பிழையின்றி எழுதுவதற்கு மேற்கொள்ள வேண்டிய முயற்சிகள் யாவை?** **(மார்ச்.24)**

- எழுத்தினைத் தெளிவாக உச்சரிக்கப் பழக வேண்டும். ந, ண, ன / ல, ள / ழ, ற, ர ஒலிப்பு வேறுபாடு தெரிந்து ஒலிக்க வேண்டும்.
- தமிழில் இவ்வெழுத்துகள் வரும் முறையையும் அவை ஏற்படுத்தும் பொருள் மாற்றத்தையும் அறிந்து கொள்வது இன்றியமையாத ஒன்றாகும்.
- எழுதும்போது தொடக்கத்தில் சிலகாலம் வாய்விட்டோ அல்லது மனத்துக்குள் உச்சரித்தபடியோ எழுதப்பழகுவது நல்லது.
- வேகமாக எழுத முயல்வது பிழைக்கு வழிகோலும், எனவே நிதானமாக எழுதுவது நல்லது.
- கெ, கே, கொ, கோ போன்ற கொம்புடைய குறில் நெடில் வேறுபாட்டினைப் புரிந்து எழுத வேண்டும்.

## பெற்றோர் ஆசிரியர் கழகம் மற்றும் அரசுப் பொதுத் தேர்வு வினா - விடைகள்

1. **உயிரெழுத்துகள் ......... வகைப்படும்.** **(பெ.ஆ.க.2)**

அ) மூன்று ஆ) ஆறு இ) எட்டு ஈ) இரண்டு **[ஈ) இரண்டு]**

2. **பொருந்தாத சொல்லை அறிக.** **(பெ.ஆ.க.2)**

அ) உறுப்பினர் ஆ) குழுவினர் இ) இயக்குனர் ஈ) ஊரினர் **[இ) இயக்குனர்]**

3. **பிழையற்ற தொடரைத் தேர்ந்தெடுக்க.** **(செப்.2020)**

அ) உங்களில் யாரால் நன்மை என நினைக்கறீர்கள்?

ஆ) உங்களுக்கு யாரால் நன்மை என நினைக்கிறீர்கள்?

இ) உங்கைள யாருக்கு நன்மை என நினைக்கிறீர்கள்?

ஈ) உங்களது யாருக்கு நன்மை என நினைக்கிறீர்கள்?

**[ஆ) உங்களுக்கு யாரால் நன்மை என நினைக்கிறீர்கள்? ]**

---

5. **தமிழில் உயிர்மெய்யெழுத்துகள் 216. அவ்வாறெனில் உயிர்மெய் நெடில் எழுத்துகள்:** **(மார்ச்.23)**

அ) 136 ஆ) 120 இ) 126 ஈ) 116 **[இ) 126]**

---

6. **எழுதும்போது ஏற்படும் பிழைகளை எவ்வாறு வகைப்படுத்தலாம்?** **(பெ.ஆ.க-1)**

- எழுத்துப்பிழை
- சொற்பொருட்பிழை
- சொற்றொடர்ப்பிழை
- பொதுவான பிழைகள் சில என வகைப்படுத்தலாம்.

---

## நம்மை அளப்போம் (பக்கம்.17)

### பலவுள் தெரிக.

1. **ச.த.சற்குணரின் உரை ஏற்படுத்திய ஆர்வத்தினால் மயிலை சீனி. வேங்கடசாமி எழுதிய நூல்**

**(பெ.ஆ.க-1,3, மார்ச்.24)**

அ) பௌத்தமும் தமிழும் ஆ) இசுலாமும் தமிழும்

இ) சமணமும் தமிழும் ஈ) கிறித்தவமும் தமிழும் **[ஈ) கிறித்தவமும் தமிழும்]**

---

2. **''மீண்டுமந்தப் பழமைநலம் புதுக்குதற்கு'' கவிஞர் குறிப்பிடும் பழமைநலம் என்பது** **(ஜீன்.2023)**

1) பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தது 2) பொதிகையில் தோன்றியது

3) வள்ளல்களைத் தந்தது.

அ) 1 மட்டும் சரி ஆ) 1, 2 இரண்டும் சரி

இ) 3 மட்டும் சரி ஈ) 1, 3 இரண்டும் சரி **[ஈ) 1, 3 இரண்டும் சரி]**

---

3. **''மின்னேர் தனியாழி வெங்கதிரொன்று ஏனையது**
**தன்னேர் இலாத தமிழ்!'' இவ்வடிகளில் பயின்று வந்துள்ள தொடை நயங்களைத் தேர்க.**

**(பெ.ஆ.க-1, ஆகஸ்ட்.22, மார்ச்.24)**

அ) அடிமோனை, அடி எதுகை ஆ) சீர் மோனை, சீர் எதுகை

இ) அடி எதுகை, சீர் மோனை ஈ) சீர் எதுகை, அடிமோனை **[இ) அடி எதுகை, சீர் மோனை]**

---

4. **''செம்பரிதி''... எனத் தொடங்கும் பாடல் இடம்பெற்றுள்ள கவிதைத் தொகுப்பு**

அ) ஒளிப்பறவை ஆ) நிலவுப்பூ இ) சர்ப்பயாகம் ஈ) சூரியநிழல் **[ஆ) நிலவுப்பூ]**

5. மயிலை சீனி. வேங்கடசாமி எழுதிய சொல்லாய்வுக் கட்டுரைகளின் தொகுப்பு
அ) மத்த விலாசம் ஆ) தமிழ்நாட்டு வரலாறு
இ) அஞ்சிறைத் தும்பி ஈ) திசை எட்டும் **[இ) அஞ்சிறைத் தும்பி]**

## பெற்றோர் ஆசிரியர் கழகம் மற்றும் அரசுப் பொதுத் தேர்வு வினா - விடைகள்

1. **‘உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்’ என்னும் விதிக்கான சான்று** **(அ.மா.வி.2019)**
அ) ஆங்கவற்றுள் ஆ) எத்திசை இ) வெங்கதிர் ஈ) பூம்பாவாய் **[அ) ஆங்கவற்றுள்]**

2. **அணியிலக்கணத்தை மட்டுமே கூறும் இலக்கண நூல்** **(மே-2022)**
அ) தொல்காப்பியம் ஆ) வீரசோழியம் இ) தண்டியலங்காரம் ஈ) முத்துவீரியம்
**[இ) தண்டியலங்காரம்]**

3. **தண்டியலங்காரம் ............ என்னும் வடமொழி இலக்கண நூலைத் தழுவி எழுதப்பட்டது.** **(மார்ச்.2023)**
அ) சூரிய நிழல் ஆ) வீரசோழியம் இ) காவியதர்சம் ஈ) முத்துவீரியம் **[காவியதர்சம்]**

4. **வெங்கதிர் இலக்கணக்குறிப்பு தருக.** **(செப்-21, மார்ச்.23)**
அ) பெயரெச்சம் ஆ) தொழிற்பெயர் இ) உரிச்சொல் ஈ) பண்புத்தொகை **[ஈ) பண்புத்தொகை]**

5. **மயிலை சீனியார் அவர்களின் அரிய ஆவணப் பணிகளில் ஒன்று இந்நூல்:** **(செப்.2020)**
அ) தமிழர் வளர்த்த அழகுக் கலைகள் ஆ) மறைந்து போன தமிழ் நூல்கள்
இ) களப்பிரர் ஆட்சியில் தமிழகம் ஈ) அஞ்சிறைத் தும்பி **[ஆ) மறைந்து போன தமிழ் நூல்கள்]**

6. **‘வியந்து’ என்பதன் சரியான பகுபத உறுப்பிலக்கணப் பிரிப்பு முறை** **(பெ.ஆ.க-3)**
அ) வியந்து + உ ஆ) விய + த் + த் + உ
இ) விய + த்(ந்) + த் + உ ஈ) வியந்த + அ **[இ) விய + த்(ந்) + த் + உ]**

7. **கவிஞர் சிற்பி எழுதிய எந்தப் படைப்பிலக்கிய நூலுக்குச் சாகித்திய அகாதமி விருது கிடைத்தது.**
**(பெ.ஆ.க-4)**
அ) ஒரு கிராமத்து கதை ஆ) ஒரு கிராமமே அழுதது
இ) ஒரு கிராமத்து நதி ஈ) ஒரு புளியமரத்தின் கதை **[இ) ஒரு கிராமத்து நதி]**

8. **தமிழ்க்குயில் எவ்வாறு வர வேண்டும்?** **(பெ.ஆ.க-6)**
அ) பாடி ஆ) சீறி இ) கூவி ஈ) ஆடி **[இ) கூவி]**

9. **சிற்பி பாலசுப்பிரமணியத்தின் ‘இளந்தமிழே’ பாடல் இடம் பெற்ற நூல்:** **(மார்ச்.20)**
அ) மஸ்னவி ஆ) நிலவுப் பூ இ) காவ்யதர்சம் ஈ) துறைமுகம் **[ஆ) நிலவுப் பூ]**

10. **“தமிழ்க்குயிலே! கூவி வா, வா!” எனக் கூறியவர்:** **(மே-2022)**
அ) சிற்பி பாலசுப்ரமணியம் ஆ) பாரதியார்
இ) சுரதா ஈ) பாரதிதாசன் **[அ) சிற்பி பாலசுப்ரமணியம்]**

**11. பாரதியார் நெல்லையப்பருக்கு, நம் பாடப்பகுதியில் உள்ள கடிதத்தை எங்கிருந்து எழுதினார். (பெ.ஆ.க-3)**

அ) எட்டயபுரம் ஆ) திருநெல்வேலி இ) புதுச்சேரி ஈ) சென்னை **[இ) புதுச்சேரி]**

**12. தம்பி நெல்லையப்பருக்கு - கட்டுரையின் ஆசிரியர் : (ஆகஸ்ட்.22)**

அ) பாரதியார் ஆ) உத்தம சோழன் இ) பூமணி ஈ) ஐராவதம் மகாதேவன்

**[அ) பாரதியார்]**

**13. பெண்ணைத் தாழ்மை செய்தோன் கண்ணைக் குத்திக் கொண்டான் என்றெழுது - என்று கடிதம் எழுதியவர் (பெ.ஆ.க-1)**

அ) நெல்லையப்பர் ஆ) பாரதியார் இ) வாணிதாசன் ஈ) பாரதிதாசன் **[ஆ) பாரதியார்]**

## குறுவினா

**1. 'தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்' நூல் பற்றிக் குறிப்பு வரைக. (ஜீலை.24)**

- கவின்கலைகள் குறித்துத் தமிழில் வெளிவந்த முழுமையான முதல்நூல்.
- தமிழரது கலைத்திறனை எடுத்தோதும் நூல்.
- தமிழக அரசின் முதற்பரிசினைப் பெற்ற நூல்.
- தமிழ்ச்சமூகம் மறந்து போன பழைய அழகுக் கலைச்செல்வங்களின் பெருமையை அறிய வைப்பதற்காக மயிலை.சீனி.வேங்கடசாமி அவர்களால் எழுதப்பட்ட நூல்.

**2. 'விரிபெரு தமிழர் மேன்மை**
**ஓங்கிடச் செய்வ தொன்றே**
**உயிர்ப்பணியாகக் கொண்டோன்' - யார், யாரைப் பற்றி, எதற்காகக் கூறுகிறார்?**

பாரதிதாசன், மயிலை சீனி. வேங்கடசாமியைப் பற்றி கூறியதாகும்.

தமிழ் இலக்கியம், கலை, தமிழர் வரலாறு, தமிழ்மொழி ஆய்வு சார்ந்த பல ஆய்வுக் கட்டுரைகளை எழுதித் தமிழின் சிறப்பை அறியச் செய்தவர் மயிலை சீனி. வேங்கடசாமி. எனவே தான் பாரதிதாசன் மயிலை சீனி. வேங்கடசாமியை நோக்கி, தமிழரின் மேன்மையை ஓங்கிடச் செய்வதொன்றை மட்டுமே உயிர்ப்பணியாகக் கொண்டவர் என்று கூறுகிறார்.

**3. கவிஞர் சிற்பி எவற்றை வியந்து பாட, தமிழின் துணை வேண்டும் என்கிறார்?**

**(மார்ச்.20, ஆகஸ்ட்.22, ஜீன்.23, ஜீலை.24)**

- செந்நிறத்து வானம்போலத் தங்கள் கைகள் சிவந்திட உழைக்கும் தொழிலாளர்களின் வியர்வை வெள்ளம்அவர்களின் திரண்ட தோள்மீது முத்துமுத்தாய் வீற்றிருக்கும். இந்த அழகினை வியந்து பாடச் செந்தமிழின் துணைவேண்டுமெனக் கவிஞர் சிற்பி கூறுகின்றார்.

**4. விடியல், வனப்பு - இரு சொற்களையும் ஒருங்கிணைத்துத் தொடர் அமைக்க.**

- விடியலில் உதிக்கும் கதிரவனின் தோற்றம் இயற்கையின் வனப்பை எடுத்துரைக்கும்.

## பெற்றோர் ஆசிரியர் கழகம் மற்றும் அரசுப் பொதுத் தேர்வு வினா - விடைகள்

1. **தமிழ் எத்தகைய வலிமை வாய்ந்தது?** **(பெ.ஆ.க-3)**

   - தமிழர்களைச் சூழ்ந்திருக்கும் அடிமைத்தனமும், அறியாமையும் முழுவதுமாக அவர்களை விட்டு அகன்றிட; அவர்கள் சிறைப்பட்டிருக்கும் அடிமைத்தன கூண்டினை உடைத்திட சிங்கம் போலச் சீறிப்பாயும் வலிமை வாய்ந்தது தமிழ்மொழி.

2. **தமிழ் மொழியின் சிறப்புகளாக நீவிர் அறிவன யாவை?** **(பெ.ஆ.க-6)**

   - உழைப்பாளர்களின் உழைப்பைப் பாட தமிழே வேண்டும்.
   - சங்கம் வைத்து தமிழ் வளர்த்த பாண்டியரின் சங்கத்தில் இருந்து செம்மொழியாக ஆட்சி செய்த மொழி.
   - பாரி போன்ற வள்ளல்கள் பலரை இத்தமிழ் மண்ணிற்குத் தந்த சிறப்புடையவள்.

3. **மயிலைநாதரின் ஆய்வுக் கட்டுரைகள் வெளியிடப்பட்ட இதழ்கள் யாவை?** **(பெ.ஆ.க.4)**

   - குடியரசு, ஊழியன், செந்தமிழ்ச் செல்வி, ஆரம்பாசிரியன், லஷ்மி முதலான இதழ்களில் மயிலைநாதரின் ஆய்வுக் கட்டுரைகள் வெளியிடப்பட்டன.

4. **''முன்னம் ஓர்நாள் பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தாய்'' - யார், யாரைப்பற்றிக் கூறியது?**

   - தமிழன்னையைப் பற்றி சிற்பி பாலசுப்பிரமணியன் கூறியது. **(பெ.ஆ.க-5,மார்ச்.23)**

## சிறுவினா

1. **மயிலை சீனி. வேங்கடசாமியின் வரலாற்று ஆய்வுகள் பற்றி விளக்குக.** **(பெ.ஆ.க-5)**

   - 1950-களில் கி.பி. 3-ஆம் நூற்றாண்டு தொடங்கி கி.பி.9-ஆம் நூற்றாண்டுக்கு இடைப்பட்ட காலங்களில் ஆட்சி புரிந்த மன்னர்களைப் பற்றிய ஆய்வில் ஈடுபட்டார். அவ்வாய்வின் பயனாக மகேந்திரவர்மன், நரசிம்மவர்மன், மூன்றாம் நந்திவர்மன் ஆகியோர் குறித்த நூல்களைப் படைத்தார்.
   - அவர் எழுதிய நூலே மூன்றாம் நந்திவர்ம பல்லவனைப் பற்றித் தமிழில் எழுதப்பட்ட முதல் நூல் என்னும் பெருமையைப் பெற்றது.
   - சங்க கால மூவேந்தர்கள், கொங்குநாட்டு மன்னர்கள், துளு நாட்டு மன்னர்கள், களப்பிரர் மற்றும் இலங்கை குறித்த வரலாறு ஆகியவற்றையும் எழுதினார்.
   - தமிழர்களின் இருண்ட காலம் என்று மரபுவழிப்பட்ட வரலாற்று ஆசிரியர்களால் குறிப்பிடப்படும் களப்பிரர்கள் காலத்தை விரிவாக ஆய்வு செய்து 'களப்பிரர் ஆட்சியில் தமிழகம்' என்னும் நூலை வெளியிட்டார். அது களப்பிரர் பற்றிய புதிய கண்ணோட்டத்தை ஏற்படுத்தியது.

2. **''செம்பரிதி மலைமேட்டில் தலையைச் சாய்ப்பான் செந்நிறத்துப் பூக்காடாம் வான மெல்லாம்'' தொடர் வெளிப்படுத்தும் காட்சி நயத்தை விளக்குக.**

   - மாலை நேரச் சூரியன், மலை முகட்டின் மீது தலையைச் சாய்க்கின்றான்.
   - சூரியனின் செம்மஞ்சள் நிறம், வானம் முழுவதும் பூக்காடு போலப் பரவிப் படர்ந்துள்ளது.
   - இயற்கை ஓவியன் புனைந்த அழகிய செந்நிறத்துப் பூக்காடாக வானம் தோன்றுவதற்கு மாலை நேரத்துச் சூரியன் காரணமாக அமைந்துள்ளான் என்பதனை இத்தொடர் அழகாக வெளிப்படுத்துகிறது.
   - அந்தி வானத்தின் சிவந்த நிறமும், அன்றாடம் உழைத்து வாழும் உழைப்பாளிகளின் கை வண்ணமும் ஒன்றே என்பதை கவிஞர் சிற்பியின் இவ்வரிகள் நயமாகக் காட்சிப்படுத்துகின்றன.

3. ‘ஏங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும்’ - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக. **(பெ.ஆ.க-1,3, மார்ச்.20, 24, செப்-21)**

இடம் :

- இப்பாடல் வரி தண்டியலங்காரம் என்னும் அணி இலக்கண நூலின் பொருளணியியலில் இடம் பெற்றுள்ள உரை மேற்கோள் பாடலாகும். இதன் ஆசிரியர் தண்டி ஆவார்.

பொருள் :

- ஒலிக்கின்ற கடலால் சூழப்பட்ட இவ்வுலகத்தின் இருளை அகற்றுவன இரண்டு. ஒன்று சூரியன், மற்றொன்று தனக்கு நிகர் இல்லாத தமிழ்மொழி என்பதே இத்தொடரின் பொருளாகும்.

**விளக்கம்:**

- எப்போதும் ஒலியெழுப்பிக் கொண்டிருக்கும் கடல் சூழ்ந்த இந்த உலகின் இருளை அகற்றும் கதிரவன் மக்களால் போற்றப்பட்டு, உயர்ந்த மலைகளுக்கு இடையே தோன்றி, சான்றோரால் தொழப்படுகின்ற ஒன்றாகும். தமிழோ, மலையில் தோன்றினாலும் மக்களின் அறியாமை இருளை அகற்றும் சிறப்புடையது.

4. **பின்வரும் இருபாக்களின் கருத்துக்களிலுள்ள வேற்றுமையை எடுத்துக்காட்டுக.**

| | |
|---|---|
| **பழையன கழிதலும் புதியன புகுதலும்<br>வழுவல கால வகையி னானே<br>- நன்னூல்** | **மீண்டு மந்தப் பழமைநலம் புதுக்கு தற்கு<br>மெய்சிலிர்க்கத் தமிழ்க்குயிலே! கூவி வா!வா!<br>- சிற்பி பாலசுப்பிரமணியம்** |

| நன்னூல் | | சிற்பி பாலசுப்பிரமணியம் | |
|---|---|---|---|
| 1. | ஒரு மொழியில், பல்வேறு காலங்களில் தோன்றிய இலக்கியங்களை நோக்கின் பழைய சொல்வழக்குகள் கழிதலும், புதிய சொல்வழக்குகள் புகுதலும் ஆகிய இப்பண்பு இடம் பெற்றிருக்கும். | 1. | நாட்டின் வளர்ச்சியில் புதுமையை ஏற்றதனால் தமிழ்நாட்டின் பண்டைய பழக்கவழக்கங்கள், வாழ்வியல் நெறிமுறைகள், மொழிப் பயன்பாடு என எல்லாம் மாறிவிட்டன. |
| 2. | கால மாற்றத்திற்கு ஏற்ப மொழியில் பழையன எல்லாம் அழிவதும் புதியன எல்லாம் புகுவதும் போற்றற்குரியன என்கின்றது இப்பாடலடி எனவே புதியவற்றை ஏற்போம். | 2. | புதியவற்றுக்கு வழிவிட்டதனால் பழமைநலம் சிதைவுற்று அழிந்துவிட்டது; பழமை தளிர்க்க தமிழ்க்குயிலே நீ மீண்டும் கூவி வர வேண்டும் என்கிறது இப்பாடலடி. |

## பெற்றோர் ஆசிரியர் கழகம் மற்றும் அரசுப் பொதுத் தேர்வு வினா - விடைகள்

1. பொருள் வேற்றுமையணியைச் சான்று தந்து விளக்குக. **(ஆகஸ்ட்.22, மார்ச்.25)**

**அணி இலக்கணம்**

- இது வேற்றுமை அணியின் ஒரு பிரிவாகும். செய்யுளில் கவிஞர் இரு வேறு பொருள்களுக்கான ஒற்றுமையை முதலில் கூறிப் பின் ஒன்றிலிருந்து ஒன்றை வேறுபடுத்திக் காட்டுவது பொருள் வேற்றுமை அணி எனப்படும்.

**சான்று**

**ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் தொழ விளங்கி**<br>
**ஏங்கொலிநீர் ஞாலத்(து) இருளகற்றும் - ஆங்கவற்றுள்**<br>
**மின்னோர் தனியாழி வெங்கதிரொன்(று) ஏனையது**<br>
**தன்னேர் இலாத தமிழ்!**

**விளக்கம்**

- எப்போதும் ஒலித்துக் கொண்டிருக்கும் கடலால் சூழப்பட்ட உலகத்தின் புற இருளை அகற்றும் கதிரவன் உயர்ந்த மலைகளுக்கு இடையே தோன்றும்.
- குளிர்ச்சி பொருந்திய பொதிய மலையிலே தோன்றிய தமிழ்மொழி, மக்களின் அறியாமை என்னும் அக இருளை அகற்றும். அத்தமிழ் மொழிக்கு நிகராக வேறெந்த மொழியும் இல்லை.

**அணிப்பொருத்தம்**

- கதிரவனும், தமிழ்மொழியும் மலையில் தோன்றுகின்றன என ஒப்புமையைக் கூறி, கதிரவன் புற இருளை அகற்றும்; தமிழ்மொழி அக இருளை அகற்றும், அதேநேரத்தில் அதற்கு நிகராக வேறெந்த மொழியும் இவ்வுலகில் இல்லை என்று வேறுபடுத்திக் காட்டியதால் இப்பாடல் பொருள் வேற்றுமையணி ஆகும்.

---

2. **'தன்னேர் இலாத தமிழ்' - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.** **(மே-2022)**

**இடம் :**

தண்டி என்பவரால் எழுதப்பட்ட தண்டியலங்காரம் என்னும் நூலில் தன்னேர் இலாத தமிழ் - தண்டியலங்கார உரை மேற்கோள் பாடல் பொருளணியியல் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

**பொருள் :**

தனக்கு நிகரில்லாத தமிழ்

**விளக்கம் :**

மக்களால் போற்றப்பட்டு, உயர்ந்த மலைகளுக்கு இடையே தோன்றி, கடலால் சூழப்பட்ட உலகத்தின் புற இருளை அகற்றுவது ஒன்று. பொதிகை மலையில் தோன்றி, சான்றோரால் தொழப்பட்டு, மக்களின் அறியாமை என்னும் அக இருளைப் போக்கும் இவ்விரண்டில் ஒன்று ஒளிர்கின்ற கதிரவன்; இன்னொன்று தனக்கு நிகரில்லாத தமிழ்.

---

3. **மயிலை சீனி. வேங்கடசாமி நினைவுச் சிறப்பிதழுக்குச் செய்திகள் உருவாக்கித் தருக.**

**(பெ.ஆ.க-1,மார்ச்.20,மார்ச்.23)**

**மயிலை சீனி.வேங்கடசாமி நினைவுச் சிறப்பிதழுக்கான செய்திகள்:**

- இன வரலாற்றை இலக்கியம், தொல்லியல், கல்வெட்டு, பண்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் தரவுகளைத் தேடி எழுதிய ஆளுமைகளில் முக்கியமானவர் மயிலை. சீனி. வேங்கடசாமி.
- 16.12.1900-ஆம் ஆண்டு சென்னை - மயிலாப்பூரில் பிறந்தவர்.
- தந்தையார் சீனிவாசன் ஒரு சித்த மருத்துவர்; தமையனார் கோவிந்தராசன் ஒரு தமிழாசிரியர்; இதுவே இவர் வரலாற்று ஆய்வாளராக மிக முக்கியக் காரணம்.
- விபுலானந்த அடிகள், கா.சுப்பிரமணியர், திரு.வி.க., தெ.பொ.மீ., ச.த.சற்குணர் ஆகிய அறிஞர் பெருமக்களோடு தொடர்பு கொண்டிருந்தவர்.
- குடியரசு , ஊழியன், செந்தமிழ்ச்செல்வி, ஆரம்பாசிரியன், லக்ஷ்மி முதலான இதழ்களில் ஆய்வுக் கட்டுரைகள் எழுதியவர்.
- தமது வாழ்வை முழுமையாகத் தமிழியல் ஆய்வுக்கு ஒதுக்கியவர்; நமது சுய அடையாளங்களை மீட்டுத் தந்தவர்.

---

4. **சிற்பி பாலசுப்பிரமணியம் - குறிப்பு வரைக.** **(பெ.ஆ.க.1)**

| | | |
|---|---|---|
| **ஆற்றிய பணி** | : | பாரதியார் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவர். |
| **ஆற்றுகின்ற பணி** | : | சாகித்திய அகாதெமியின் செயற்குழு உறுப்பினர். |
| **சிறப்பு** | : | கவிஞர், பேராசிரியர், மொழிபெயர்ப்பாளர், இதழாசிரியர் எனப் பன்முகம் கொண்டவர். |
| **விருது** | : | 'ஒரு கிராமத்து நதி' என்ற கவிதை நூலிற்காகவும் மொழிபெயர்ப்பு நூல் ஒன்றிற்காகவும் இரு முறை சாகித்திய அகாதெமி விருதினைப் பெற்றுள்ளார். |
| **படைப்புகள்** | : | **கவிதை நூல்கள்** - நிலவுப்பூ, ஒளிப்பறவை, சர்ப்பயாகம், சூரியநிழல், ஒரு கிராமத்து நதி, பூஜ்யங்களின் சங்கிலி முதலியவை. **உரைநடை நூல்கள்** - இலக்கியச் சிந்தனைகள், மலையாளக் கவிதை, அலையும் சுவடும். **மொழிபெயர்ப்பு நூல்கள்** - மலையாளக் கவிதைகள் மற்றும் புதினங்களை மொழிபெயர்த்துள்ளார். |

5. **கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியத்தின் இலக்கியப் பணிகுறித்து எழுதுக?** **(பெ.ஆ.க-1)**

- கவிஞர், பேராசிரியர், மொழிபெயர்ப்பாளர், இதழாசிரியர் எனப் பன்முகம் கொண்டவர் சிற்பி பாலசுப்பிரமணியம்; பாரதியார் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றியவர்;
- மொழிபெயர்ப்புக்காகவும் 'ஒரு கிராமத்து நதி' என்னும் கவிதை நூலிற்காகவும் இருமுறை சாகித்திய அகாதெமி விருது பெற்றவர். இவருடைய கவிதைகள் ஆங்கிலம், கன்னடம், மலையாளம், மராத்தி, இந்தி ஆகியவற்றில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.
- இவர் ஒளிப்பறவை, சர்ப்பயாகம், சூரிய நிழல், ஒரு கிராமத்து நதி, பூஜ்யங்களின் சங்கிலி முதலிய பல கவிதை நூல்களை ஆக்கியவர்; இலக்கியச்சிந்தனைகள், மலையாளக் கவிதை, அலையும் சுவடும் உள்ளிட்ட உரைநடை நூல்களையும் எழுதியுள்ளார்;
- மலையாளத்திலிருந்து கவிதைகளையும் புதினங்களையும் மொழிபெயர்த்துள்ளார்; சாகித்திய அகாதெமியின் செயற்குழு உறுப்பினராகவும் இருக்கிறார்.

6. **'பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தாய்' - என்று சிற்பி கூறுவதன் பொருள் யாது?** **(மார்ச்.23)**

- முதற்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் ஆகிய முச்சங்கங்களை அமைத்து தமிழைப் போற்றி வளர்த்தனர் பாண்டியர்கள்.
- பாரி முதலான வள்ளல்களையும் புலவர்கள் எண்ணற்றோரையும் தோற்றுவித்தவள் தமிழன்னை.
- அகம், புறம் சார்ந்த இலக்கியங்களையும் ஐம்பெருங்காப்பியங்களையும் உருவாக்கி முச்சங்கத்தில் தமிழன்னை முடிசூட்டிக் கொலுவீற்று இருந்தாள். அத்தகைய பழமை நலத்தையே சிற்பி இத்தொடரின் மூலம் விளக்குகிறார்.

## நெடுவினா

1. **மயிலை சீனி. வேங்கடசாமி ஓர் ''ஆராய்ச்சிப் பேரறிஞர்'' என்பதனைச் சான்றுகளுடன் நிறுவுக.** **(மார்ச்.23)**

**முன்னுரை:**

இலக்கண இலக்கிய வளம் மிக்க தமிழின் பன்முகத்தன்மையை ஆய்வாளர்கள் பலர் தங்கள் ஆய்வுகளின் மூலம் வெளியிட்டுள்ளனர். அப்படிப்பட்ட ஆய்வாளர்களுள் ஒருவரான மயிலை சீனி வேங்கடசாமியின் ஆய்வுகள் பற்றியும் அவர்தம் பன்முக ஆற்றல் குறித்தும் இக்கட்டுரையில் காண்போம்.

**தமிழ்த்தேனீ:**

- இளமையிலே தமிழின் மீது தீராத பற்றுக் கொண்டவர்.

- ❖ கட்டுரையோ, நூலோ எழுதும் முன் தரவுகளைச் சேகரித்து, ஐயமிருப்பின் ஆன்றோர்களிடம் கேட்டுத் தெரிந்து தெளிந்த பிறகு புத்தகம் வெளியிடுவார்.
- ❖ அறிவின் வாயில்களை நோக்கியே அவர் கால்கள் நடந்தன.
- ❖ நூலகம் அவருக்குத் தாய்வீடு போன்றிருந்தது.

**பல்துறை அறிஞர்:**

- ❖ ச.த.சற்குணர் உரையால் முதல் நூலான 'கிறித்துவமும் தமிழும்' உருவானது.
- ❖ கல்வெட்டு ஆய்வில் பயிற்சி அதிகம் பெற்றவர்.
- ❖ தமிழ் எழுத்தியலை நன்கு உணர்ந்தவர்.
- ❖ மன்னர்கள் பலரைப் பற்றிய ஆய்வும், தரவும் இவரால் வெளியிடப்பட்டன.
- ❖ கலையியல் சார்ந்த தமிழில் வெளியான பல நூல்களுக்கு இவரே வழிகாட்டி.
- ❖ கலை வளர்ச்சிக்குப் பல்துறை அறிவும், இளமையில் ஓவியம் கற்றதும் பெரும் பயனைக் கொடுத்தன.

**பல்வகை ஆய்வறிஞர்:**

- ❖ தமிழக வரலாற்றைப் பல கோணங்களில் மீட்டுருவாக்கம் செய்தவர்.
- ❖ துளு மொழியையும் தமிழையும் ஒப்பிட்டு ஆய்வு செய்தவர்.
- ❖ இவரது சொல்லாய்வுக் கட்டுரைக்கு 'அஞ்சிறைத் தும்பி' என்ற தொகுப்பே சான்றாகும்.

**ஆராய்ச்சிப் பேரறிஞர்:**

- ❖ இவரின் ஆய்வுகள் அறிஞர்களுக்கு மட்டுமன்றி பொது மக்களுக்கும் அறிவை வழங்கியது.
- ❖ இவரது ஆய்வு அடிமரமாக இருந்து பல புதிய ஆய்வுகள் கிளைவிடக் காரணமாக இருந்தன.
- ❖ இவரது எழுத்தாளுமையால் இவரது புத்தகத்தின் எந்த ஒரு பகுதியையும் ஒதுக்க இயலாது.

**பட்டங்களும் பாராட்டுகளும்:**

- ❖ 1962-இல் தமிழ் எழுத்தாளர் சங்கம் பாராட்டிக் 'கேடயம்' வழங்கியது.
- ❖ மதுரை காமராசர் பல்கலைக் கழகம் 'தமிழ்ப் பேரவைச் செம்மல்' என்ற விருது வழங்கியது.
- ❖ தமிழக வரலாற்றுக் கழகத்திலும், தமிழகப் புலவர் குழுவிலும் உறுப்பினராக இருந்து பணியாற்றியவர்.
- ❖ அரிய ஆய்வு முடிவுகளை உலகிற்குத் தந்தமையால் அறிஞர்கள் கூடிச் சென்னை கோகலே மண்டபத்தில் மணி விழா எடுத்து 'ஆராய்ச்சிப் பேரறிஞர்' என்ற பட்டத்தை வழங்கினர்.

**முடிவுரை:**

தமிழ் மொழியின் பெரும் பரப்பு இவர்தம் ஆய்வுகள் வழி வெளிப்பட்டுள்ளது. தம் வாழ்வையே தமிழியல் ஆய்வுக்காக ஒதுக்கிய மயிலை. சீனி. வேங்கடசாமி தமிழுக்குக் கிடைத்த அரிய சொத்து என்பதில் ஐயமில்லை.

---

2. **பாரதியின் கடிதம் வாயிலாக நீங்கள் அறிந்து கொண்ட மொழிப்பற்று, சமூகப்பற்று ஆகியவற்றை விவரிக்க.**

**(மே-2022, செப்-21, மார்ச்.23)**

**முன்னுரை:**

உறவுக்கு, அறிவுறுத்தலுக்கு, வேண்டுதலுக்கு, வணிகத்திற்கு என்று பலரும் கடிதங்கள் எழுதுகின்றனர். எழுத்தாளர்களோ கடிதங்களை இலக்கியமாக்கி மொழிக்கு அதன் வழியாக தனி அழகையே உருவாக்கித் தருகிறார்கள். பாரதியின் அத்தகையொரு கடிதத்தையும் அதன் உள்ளடக்கத்தையும் பற்றி நாம் அறிந்து கொள்வோம்.

**மொழிப்பற்று:**

- ❖ யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல இனிதான மொழி எதுவுமில்லை என்று கூறிய பாரதி, தான் சு.நெல்லையப்பருக்கு எழுதிய கடிதத்திலும் அதனை உறுதிப்படுத்துகின்றார்.

- ❖ நெல்லையப்பரிடம் அவர் கூறும்போது, 'நீ பிறமொழிகளை அறிந்திருந்தாலும் தமிழை வளர்ப்பதைக் கடமையாகக் கொள்ளவேண்டும்' என்று கூறுகின்றார்.
- ❖ புதிய புதிய செய்திகளும் புதிய புதிய உண்மைகளும், புதிய புதிய இன்பமும் தமிழ்மொழியில் ஏற்றம் பெற வேண்டும்.
- ❖ தமிழ்நாட்டில் வீதிகள் தோறும் தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் பெருக வேண்டும். அந்தப் பள்ளிகளில் எல்லாம் புதிய புதிய கலைகள் பயிற்சி அளிக்கப் பெற்று வளர வேண்டும்.
- ❖ தாய் மொழியிலே கற்பதால் தமிழ் உணர்வு அதிகமாகும், தாய்நாட்டின் மீது பற்று ஏற்படும்.
- ❖ பிறநாட்டு மொழிகள் எல்லாம் அடைந்துள்ள வளர்ச்சியைப் பார்த்த பின்பாவது நாம் நம் தாய்மொழியாம் தமிழ்மொழியின் மீது பற்றுக் கொள்ள முயலவேண்டும்.
- ❖ புதிய புதிய சிந்தனைகள் தமிழ்மொழியில் தோன்றல் வேண்டும் என்கிறார்.

**சமூகப்பற்று:**

- ❖ சமூகத்தின் அவலமாக இருக்கின்ற ஆண் பெண் வேறுபாடு முற்றிலுமாக அழிய வேண்டும்.
- ❖ ஆண் உயர்ந்தவன் பெண் அடிமை என்ற நிலை சமூக அவலமாகும்.
- ❖ ''ஆணும் பெண்ணும் ஒருயிரின் இரண்டு தலைகள், அவற்றில் ஒன்றிலொன்று தாழ்வில்லை'', என்கிறார்.
- ❖ பெண்ணைத் தாழ்த்தினால் சமூகமே சாபக்கேட்டிற்குள்ளாகும் என்பதை உணர்த்த பெண்ணைத் தாழ்த்தினவன், தன் கண்ணைக் குத்தியவனுக்குச் சமம் என்று ஆவேசத்துடன் கூறுகின்றார்.
- ❖ பெண்ணை வீட்டுக்குள்ளே அடைத்தவன் தன் கண்ணை இழந்தவன் போலப் பரிதவிப்பான் என்றும் கூறி ஆணும் பெண்ணும் சமம் என்ற சமூக நீதியை வலியுறுத்துகின்றார்.
- ❖ சமூகம் வளர்ச்சி அடையத் தொழில் பெருக வேண்டும், வியாபாரம் சிறக்க வேண்டும், தொழிற்சாலைகள் வளர வேண்டும் என்கிறார்.
- ❖ சமூக மாற்றம் காண சங்கீதம், சிற்பம், இயந்திரம், பூமி, வானம், இயற்கை சார்ந்த நூல்கள் ஆயிரம் ஆயிரமாகத் தாய்மொழியில் உருவாகிட வேண்டும்.
- ❖ நம் தமிழ்ச்சமூகம் மாற்றம் பெற அனைவரும் எண்ணிட வேண்டும்.
- ❖ அதற்குரிய சக்தியை அனைவரும் பெற்றிடவும் வேண்டுமென்று பாரதியார் சு.நெல்லையப்பருக்கு எழுதிய கடிதம் மூலம் தன் உள்ளக் கருத்தை வெளிப்படுத்துகின்றார்.

**முடிவுரை:**

பாரதி பன்முகம் கொண்டவர் என்பதையும், அழுத்தமான எண்ணங்களை ஈர்க்கும் மொழியில் தருவதில் வல்லவர் என்பதையும், மொழியின் மீதும் சமூகத்தின் மீதும் பாரதி கொண்டிருந்த பற்றையும் அவர்தம் கடிதத்தின் வாயிலாக அறிந்து கொள்ள முடிந்தது.

**(அல்லது)**

**மொழிப்பற்று:**

- ❖ எப்போதும் தமிழை வளர்ப்பதையே கடமையாகக் கொள்ள வேண்டும்.
- ❖ புதிய செய்தி, புதிய யோசனை, புதிய உண்மை, புதிய இன்பம் முதலியன தமிழில் ஏறிக்கொண்டே போக வேண்டும்.
- ❖ வீதிதோறும் தமிழ்ப் பள்ளிக் கூடங்கள் பெருக வேண்டும்.
- ❖ தமிழ்ப் பள்ளிகளில் நவீன கலைகளெல்லாம் பயிற்றுவிக்கப் பெற்று வளர வேண்டும்.
- ❖ பிற மொழிகளில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியைக்கண்டு, நாமும் தமிழ்மொழியில் பற்பல புதுமைகள் செய்து தமிழ்மொழியை வளர்க்க வேண்டும்.

**சமூகப்பற்று:**

- ❖ ஆண், பெண் ஏற்றத்தாழ்வு நீங்க வேண்டும்.
- ❖ ஆணும் பெண்ணும் ஓருயிரின் இரண்டு தலைகள், அவை ஒன்றிலொன்று தாழ்வில்லை.
- ❖ பெண்ணைத் தாழ்மை செய்தோன் தன் கண்ணைத் தானே குத்திக் கொண்டதற்குச் சமமானவன்.
- ❖ பெண்ணை அடைத்தவன்; கண்ணை அடைத்தவன்.
- ❖ தொழில்கள், வியாபாரம் வளர வேண்டும்.
- ❖ தொழிலுக்குத் தேவையான எந்திரங்கள் பெருக வேண்டும்.
- ❖ இசை, சிற்பம், யந்திரநூல், பூமி நூல், வான நூல், இயற்கை நூல்களெல்லாம் தமிழ்நாட்டில் பெருக வேண்டும்.
- ❖ முயற்சிகள் ஓங்கி, நாடு செழிக்க வேண்டும்.

இவ்வாறு பாரதியார் தம் மொழிப்பற்றையும், சமூகப் பற்றையும் சீரிய சிந்தனைகளால் வெளிப்படுத்தி நெல்லையப்பருக்குக் கடிதம் எழுதியுள்ளார்.

---

3. **தமிழின் சீரிளமைத் திறம் வியந்து கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.**

**(செப்-21, மே-2022, ஜீலை.24, மார்ச்.25)**

**எனது அருமைச் செந்தமிழே!**

மாலை நேரத்துச் சிவந்த நிறமுள்ள சூரியன், மலை முகட்டில் தனது தலையைச் சாய்க்கின்றான். அப்போது அவனுடைய செம்மஞ்சள் நிற ஒளிபட்டு வானம் பூக்காடு போலக் காட்சியளிக்கிறது. அதுபோல அன்றாடம் அயராது உழைக்கும் உழைப்பாளர்களின் கரங்கள் சிவந்துள்ளன.

அத்தகைய தொழிலாளர்களின் பருத்த தோள்கள் மீது வியர்வைத் துளிகள் முத்துமுத்தாய் அரும்பியுள்ளன.

இவற்றையெல்லாம் வியந்து பாடுவதற்கு, உன்னைவிடப் பொருத்தமான துணை வேறில்லை.

**முத்தமிழே!**

எமது உள்ளத்தில் மூண்டு எழும் கவிதை வெறிக்கு நீயே உணவாக இருக்கிறாய்! முன்னொரு காலத்தில் பாண்டிய மன்னர்கள் அமைத்த தமிழ்ச்சங்கத்தில் நீயே அரசாட்சி புரிந்தாய். பாரி முதலான கடையெழு வள்ளல்களை எமக்குத் தந்தாய். எமது உடல் சிலிர்ப்படையுமாறு மீண்டும் அத்தகைய பழமைச் சிறப்பைப் புதுப்பிப்பதற்காக தமிழ்க் குயிலாக நீ கூவ வேண்டும். தென்றல் தவழும் பொதிகை மலையில் தோன்றி வளர்ந்த தமிழே! தடைகள் இருந்தால் தாண்டி, கூண்டை உடைத்து வெளிப்படும் சிங்கம்போல நீ சீறிவர வேண்டும்.

இவ்வாறாக, தமிழின் சீரிளமைத்திறத்தினை வியந்து கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் கூறுகிறார்.

**(அல்லது)**

**தமிழே ஏற்ற துணை!**

மாலையில் மறையும் கதிரவனின் ஒளியால் வானம் சிவந்தது போல, உழைக்கும் தொழிலாளர்களின் கைகள் சிவந்து, தோள்களில் வியர்வை முத்துமுத்தாய் தோன்றுகிறது. இதனை வியந்துபாட தமிழே ஏற்ற துணையாகும்.

**உள்ளத்து உணர்வுகளைப் பாட தமிழே துணை!**

உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளைக் கவிதையாக உருவாக்குவதற்கு முத்தமிழே துணை புரிகிறது.

**வள்ளல்களை ஈன்று தந்த தாய்!**

பாண்டியர் அமைத்த தமிழ்ச்சங்கத்தில் வீற்றிருந்த தமிழ்மொழியைப் போற்றி வளர்க்கும் பாரி போன்ற வள்ளல்களைத் தந்தாள்.

**மீண்டுமந்த பழமை நலம்!**

மொழியைப் போற்றும் புலவர்களும், வள்ளல்களும் கூடித் தமிழை வளர்க்கும் பழமை நலம் மீண்டும் வரத் தமிழ்க்குயிலே கூவிடுக.

**சிங்கம் போலச் சீறி வா!**

கூண்டை உடைத்துக் கொண்டு சீறிப்பாயும் சிங்கம் போலத் தமிழுக்கு ஏற்பட்ட தடைகளையெல்லாம் தகர்க்க, பொதியமலையில் தோன்றிய தென்தமிழே சீறி வா! என்கிறார் கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம்.

---

4. **''சொல்லோவியங்கள்'' என்னும் கவிதை நூல் உங்கள் பள்ளி ஆசிரியரால் எழுதப்பட்டு உங்கள் பள்ளியில் வெளியிடப்படுகிறது. அவ்வெளியீட்டு விழாவிற்கான நிகழ்ச்சி நிரலை உருவாக்கி, நன்றியுரை எழுதுக.**

**(ஆகஸ்ட்.22)**

**சொல்லோவியங்கள் கவிதை நூல் வெளியீட்டு விழா**

இடம் : அரசு மேனிலைப்பள்ளி, சிவகங்கை. நாள் : 19.06.2019, புதன்கிழமை

நேரம் : பிற்பகல் 2 மணி

**நிகழ்ச்சி நிரல்**

**இறைவணக்கம்** : மாணவர்கள்

**தமிழ்த்தாய் வாழ்த்து** : மாணவர்கள்

**வரவேற்புரை** : **திரு.மு.முரளி**
(தமிழாசிரியர், அரசு மேனிலைப்பள்ளி, சிவகங்கை)

**வாழ்த்துரை** : **திரு.ச.சரவணக்குமார்**
(தலைமையாசிரியர், அரசு மேனிலைப்பள்ளி, சிவகங்கை)

**நடனம்** : மாணவர்கள்

**சொல்லோவியங்கள் நூல் அறிமுக உரை** : **திரு.ப.நன்மாறன் அவர்கள்**
(எழுத்தாளர்)

**நூல் வெளியீடு** : **சொல்லோவியங்கள் கவிதை நூல்**

**வெளியிட்டு வாழ்த்துரை** : **திருமிகு.அ.தமிழ்க்குமரன் அவர்கள்,**
(மாவட்டக் கல்வி அலுவலர், விழுப்புரம்)

**முதல் பிரதியைப் பெற்றுக் கொள்பவர்** : **திருமிகு.தா.வேலவன் அவர்கள்,**
(தொழிலதிபர் மற்றும் சமூக ஆர்வலர்)

**நூலாசிரியர் உரை** : **திரு.கவிஞர் ச.நல்லதம்பி அவர்கள்**
(முதுகலைத் தமிழாசிரியர், அரசுமேனிலைப்பள்ளி, சிவகங்கை)

**தலைமை உரை** : **திருமிகு.ச.இளவழகன், அவர்கள்**
(எழுத்தாளர், திரைப்பட இயக்குநர், தேசிய விருது பெற்றவர்)

**விழிப்புணர்வுப் பாடல்கள்** : மாணவிகள்

**நன்றியுரை** : **திரு.இரா.கலைச்செல்வி**
(உதவித் தலைமையாசிரியை, அரசுமேனிலைப்பள்ளி, சிவகங்கை)

**நாட்டுப்பண்** : அனைவரும்

## நன்றியுரை

அனைவருக்கும் இனிய மாலை வணக்கம்!

இந்த இனிய விழாவில் வரவேற்புரை நல்கிய நம் பள்ளியின் தமிழாசிரியர் திரு.மு.முரளி அவர்களுக்கும், சொல்லோவியங்கள் நூலை இயற்றிய கவிஞரும் தமிழாசிரியருமான திரு.ச.நல்லதம்பி அவர்களுக்கும் வாழ்த்துரை வழங்கிய தலைமையாசிரியர் திரு.சரவணக்குமார் அவர்களுக்கும் மனமார்ந்த நன்றியை உரித்தாக்குகிறேன்.

நூலின் கவிதைகள் பற்றிய அறிமுக உரை வழங்கி அமர்ந்திருக்கும் எழுத்தாளர் திரு.ப.நன்மாறன் அவர்களுக்கும், நூலின் முதல் பிரதியைப் பெற்றுக் கொண்ட தொழிலதிபரும் நம் பள்ளியின் புரவலருமான திரு.தா.வேலவன் ஐயா அவர்களுக்கும் நூலை வெளியிட்டு வாழ்த்துரை வழங்கிய மாவட்டக் கல்வி அலுவலர் திரு.தமிழ்க்குமரன் அவர்களுக்கும் எம் பள்ளிச் சமூகத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

விழாவின் நாயகனான நூலாசிரியர் திரு.ச.நல்லதம்பி அவர்களுக்கும், இந்நிகழ்வின் தலைமகனாய் விளங்கி ஆக்கமும் ஊக்கமும் தரும் தலைமையுரை ஆற்றிய திரைப்பட இயக்குநர் திரு.ச.இளவழகன் அவர்களுக்கும், நடனமாடிய மாணவர்களுக்கும், விழிப்புணர்வுப் பாடல்கள் பாடிய மாணவிகளுக்கும் இந்நிகழ்வில் கலந்து கொண்ட ஆசிரியர்களுக்கும் பெற்றோர்களுக்கும், முன்னாள் மாணவ-மாணவியருக்கும் மனமார்ந்த நன்றியை இம் மாலை வேளையில் உரித்தாக்கி நிறைவு செய்கிறேன்.

நன்றி! வணக்கம்!

---

## மொழியை ஆள்வோம் (பக்கம் – 18)

### இரு பக்க அளவில் கட்டுரை எழுதுக.

**தாய்மொழிவழிக் கல்வியின் சிறப்புகள்.**

**எண்ணத்தை வெளியிடுவதற்கும், சிந்தனையாற்றல் பெருகுவதற்கும் தாய்மொழியே துணைநிற்கும் - இதனை வலியுறுத்தி பின்வரும் குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.**

**தாய்மொழிக் கல்வியின் தேவை - தாய்மொழிச் சிந்தனை - அறிஞர்களின் பார்வை - கற்கும் திறன் - பயன் - இன்றைய நிலை**

**முன்னுரை:**

**''தாய்மொழி கண் போன்றது**
**பிறமொழி கண்ணாடி போன்றது''**

நமது எண்ணங்களைப் பிறருக்கு வெளிப்படுத்த உதவுவது மொழியே. மொழி ஒரு கருவி. மனிதன் மொழி கொண்டுதான் வாழ்கின்றான். மொழியால்தான் கருத்துப் பரிமாற்றமும் செய்கின்றான். தனது எண்ணத்தை வெளியிடுவதற்கும் சிந்தனையாற்றலைப் பெருக்கவும் துணையாக இருக்கும் தாய்மொழிவழிக் கல்வியின் சிறப்புகள் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**தாய்மொழி வழிக் கல்வியின் தேவை:**

மனிதனின் அடையாளம் அவனது தாய்மொழிதான். கல்வி என்பது தாய்மொழி வழியாக மட்டுமே கற்பிக்க படவேண்டும். மனிதனின் சிந்தனையும் கற்பனையும் தாய்மொழியில்தான் உருவாகின்றன. எனவே, மனிதனின் சிந்தனை வளர்ச்சிக்குத் தாய்மொழி வழிக் கல்வியே சிறந்தது. சிந்திக்கின்ற மொழியிலே பயிற்றுவிக்கப்படுகின்ற கல்வி சிந்தனையைக் கூட்டுகின்றது. நுணுக்கங்களையும் அறிவியல் படைப்புகளையும் உருவாக்க மனிதர்களைத் தயார்படுத்துகின்றது.

**தாய்மொழிச்சிந்தனை:**

தாய்மொழிதான் சிந்திக்கும் திறனின் திறவுகோலாக இருக்கின்றது. எத்தனை மொழிகள் கற்றாலும் எந்த மொழியைக் கற்றாலும் ஒருவனின் சிந்தனை உருவெடுப்பது தாய்மொழியில்தான். தாய்மொழியால் சிந்தனை பெருகும். மனிதர்களின் மனவளர்ச்சி வாழ்விற்கு அடிப்படை. அத்தகைய மனவளர்ச்சி தாய்மொழியால் முடியும். தாய்மொழியில் சிந்திப்பதால் உயர்ந்த கருத்துகளைச் சிறந்த சொற்களைக் கொண்டு உணர்த்த முடியும்.

**அறிஞர்கள் பார்வை:**

உலகில் வாழ்ந்த அறிஞர்கள் பலர் தாய்மொழிக் கல்வியின் அவசியத்தைக் கூறியிருக்கின்றார்கள். காந்தியடிகள் கூறும்போது ''ஜெகதீஷ் சந்திரபோஸ், பி.சி.இராய் முதலியோரின் சாதனைகளைக் கண்டு நாம் மகிழ்ச்சியடைகிறோம்; ஆனால், தாய்மொழி மூலம் நமக்குக் கல்வி அளிக்கப்பட்டிருந்தால் நம்மிடையே பல போஸ்களும், இராய்களும் தோன்றியிருப்பார்கள்'', என்கிறார். சாகிர் ஹீசைன் (1938-ஆம் ஆண்டு) குழு தாய்மொழியில் கற்றுக் கொடுத்தலை வலியுறுத்துகிறது. டி.எஸ். கோத்தாரி குழுவும் (1964) தேசியக் கல்விக் கொள்கையில் தாய்மொழிக் கல்வியை வலியுறுத்தியது.

**கற்கும் திறன்:**

தாய்மொழியைப் பற்றி வீழ்ந்த நாடும் இல்லை; தாய்மொழியைப் புறக்கணித்து வாழ்ந்த நாடும் இல்லை. தாய்மொழி மூலமாகவே ஒருவர் தான் கூற விரும்பும் கருத்தைத் தெளிவாகவும் முழுமையாகவும் ஆழமாகவும் தெரிவிக்கமுடியும். கற்கும் திறன் அதிகரிப்பது தாய்மொழி வழியாகவே. தாய்மொழி வழியாகக் கற்கும் போது சிந்தனைத் திறன் அதிகமாகும்.

**தாய்மொழி வழிக் கல்வியின் பயன்:**

''கருவில் உள்ள குழந்தை ஏழு மாதத்திலேயே மூளை முதிர்ச்சி பெற்று ஒலிகளைக் கேட்கிறது'' என்கின்றனர் மருத்துவ அறிஞர்கள். குழந்தை வளரும் சூழல் மொழித்தாக்கத்திற்கு அடிப்படையாக அமைகிறது. அக்குழந்தைகள் தாய்மொழி வழியாகக் கற்கும் சூழல் ஏற்பட்டால் மிகச் சிறந்த அறிஞர்களாக, மேதைகளாக வளர்வார்கள். குழந்தைகள் தாய்மொழி வழியாகக் கல்வி கற்றால் தரமான கல்வியைப் பெறுவார்கள்.

**இன்றைய நிலை:**

இன்று தாய்மொழி வழியில் கல்வி கற்பதைக் கௌரவக் குறைச்சலாகவும், கேவலமாகவும் நினைக்கின்றனர். தாய்மொழியில் கல்வி கற்றவர்களைத் தரம் குறைந்தவர்களாகப் பார்ப்பது சமூகத்தில் நிலவி வரும் அவலங்களில் ஒன்றாகும். தாய்மொழியில் கல்விகற்போருக்கு அரசுப் பணிகளில் முன்னுரிமை வழங்குதல் வேண்டும்.

**முடிவுரை:**

மொழி என்பது ஒரு தகவல் தொடர்பு சாதனம் மட்டுமல்ல; ஒரு பண்பாட்டின், ஒரு இனத்தின் அடையாளம் என்பதை யாவரும் உணர்ந்தாலே தாய்மொழியை அழிவிலிருந்து காக்கலாம்.

## தமிழாக்கம் தருக.

1. **Learning is a treasure that will follow its owner everywhere.** **(பெ.ஆ.க-2,3, மே-2022)**

   கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு

2. **A new language is a new life.** **(பெ.ஆ.க-2,3, மே-22, ஜீன்.23, மார்ச்.24)**

   புதிய மொழி புதிய வாழ்க்கை

3. **If you want people to understand you, speak their language.** **(பெ.ஆ.க-2, ஜீன்.23, மார்ச்.24)**

   பிறர் உன்னைப் புரிந்துகொள்ள வேண்டுமாயின் அவர்மொழியில் பேசு.

4. **Knowledge of languages is the doorway to wisdom.** **(பெ.ஆ.க-2,3, மே-22, ஜீன்,23, மார்ச்.24)**

மொழிகளின் அறிவு ஞானத்தின் திறவுகோல்/ வழித்தடம்.

5. **The limits of my language are the limits of my world.** **(பெ.ஆ.க-3, மே-22, ஜீன்.23, மார்ச்.24)**

என் மொழியின் எல்லை என் உலகத்தின் எல்லை.

## இலக்கிய நயம் பாராட்டுக.

**முச்சங்கங்கூட்டி**
**முதுபுலவர் தமைக் கூட்டி**
**அச்சங்கத் துள்ளே**
**அளப்பரிய பொருள்கூட்டி**
**சொற்சங்க மாகச்**
**சுவைமிகுந்த கவிகூட்டி**
**அற்புதங்க ளெல்லாம்**
**அமைத்த பெருமாட்டி!** **- கண்ணதாசன் (பெ.ஆ.க-5,6, மார்ச்.24)**

**முன்னுரை / ஆசிரியர் குறிப்பு:**

இப்பாடலைப் பாடியவர் கவியரசு கண்ணதாசன் ஆவார். இவர் புகழ்பெற்ற தமிழ்த் திரைப்படப் பாடலாசிரியர் ஆவார். தமிழக அரசின் அரசவைக் கவிஞராகப் பதவி வகித்தவர். சாகித்திய அகாதெமி விருது பெற்றவர்.

**திரண்ட கருத்து:**

'தமிழன்னை முதல், இடை, கடை என முச்சங்கம் அமையக் காரணமானவள். மூத்த புலவர் பெருமக்களை ஒன்று கூட்டியவள். தமிழ்ச்சங்கத்துள் அளவிட இயலாத பொருட்களை விவரிக்கும் இலக்கியங்களை உருவாக்கியவள். சுவை மிகுந்த சொற்களாலான கவிதைகளைப் படைத்தவள். இத்தகைய அற்புதங்களை நிகழ்த்திக் காட்டிய பெருமை மிக்கவள்', என்பதே இப்பாடல் வரிகளின் திரண்ட கருத்தாகும்.

**மையக்கருத்து:**

'சங்கமாக அமைந்து படைப்பாளர்களையும், படைப்புகளையும் பெருமைப்படுத்தியவள் தமிழன்னை',என்பதே இப்பாடலின் மையக் கருத்தாகும்.

**சொல்நயம்:**

**'விசயனுக்கு வில் அழகு**
**கவிதைக்குச் சொல் அழகு'** என்பார்கள். அதற்கேற்ப இப்பாடலில் முச்சங்கம், சொற்சங்கம், முதுபுலவர் என்பன போன்ற சொற்கள் நயமுடன் அமைக்கப்பட்டு இப்பாடல் சொல்நயம் பெற்று மிளிரக் காணலாம்.

**பொருள் நயம்:**

'முச்சங்கம் கூட்டி, முதுபுலவர் தமைக்கூட்டி', 'அளப்பரிய பொருள்கூட்டி அற்புதங்கள் எல்லாம் அமைத்த பெருமாட்டி' - இவை எல்லாமே பொருள் நயமிக்க தொடர்களாக அமைக்கப்பெற்று, இப்பாடல் பொருள் நயமுடையதாக விளங்குகிறது.

**தொடை நயம்:**

**'தொடையற்ற பாட்டு**
**நடையற்றுப் போகும்'** என்பார்கள். அதற்கேற்ப இப்பாடலில் கீழ்வரும் தொடைநயங்கள் அமைந்து இன்பம் நல்கிடக் காணலாம்.

**(i) மோனை நயம்:**

பாடலின் சீர்கள் தோறும் அல்லது அடிகள் தோறும் முதல் எழுத்து ஒன்றி வரத் தொடுப்பது மோனை ஆகும்.

**'படைக்குச் சேனை அழகு**
**பாட்டுக்கு மோனை அழகு'** என்பார்கள். அதற்கேற்ப இப்பாடலில்,

முச்சங்கம் -முதுபுலவர்
அச்சங்கம் -அளப்பரிய

சொற்சங்கம் -சுவைமிகுந்த
அற்புதங்கள் -அமைத்த
என்று மோனை நயம் பயின்று வந்துள்ளது.

**(ii) எதுகை நயம்:**

முதலெழுத்து அளவொத்து நிற்க, இரண்டாம் எழுத்து ஒன்றி வரத் தொடுப்பது எதுகையாகும்.

**‘இயற்கையில் உதகை அழகு**
**செய்யுளில் எதுகை அழகு’** என்பார்கள்.

அதற்கேற்ப இப்பாடலில்,
முச்சங்கம் - அச்சங்கம்
சொற்சங்கம் - அற்புதம்
போன்ற எதுகை நயம் மிக்க சொற்கள் பயின்று வந்துள்ளன.

**இயைபு நயம்:**

அடிகள் தோறும் இறுதிச்சீரோ அல்லது எழுத்தோ ஒன்றி வரத் தொடுப்பது இயைபு நயம் ஆகும்.

இப்பாடலில், இறுதிச்சீர்கள் ஒன்றி வந்துள்ளன.

**கூட்டி - கூட்டி**

**சந்த நயம்:**

**‘வாழ்க்கைக்கு அழகு சொந்தம்**
**பாடலுக்கு அழகு சந்தம்’** என்பார்கள்.

அதற்கேற்ப இப்பாடல் எதுகை - மோனைச் சொற்கள் அமைந்து, எளிய - இனிய சொற்களைக் கொண்டு, சுவைபடப் பாடத்தக்க வகையில் அமைந்துள்ளது. எனவே இப்பாடல் சந்தநயம் பெற்றுத் திகழ்கிறது.

**முடிவுரை:**

சொல் நயம், பொருள் நயம், தொடை நயம் மிக்க இப்பாடல் கற்போருக்குக் களி பேரின்பம் தருவதாக அமைந்துள்ளது. இது போன்ற பாடல்களைப் படித்துச் சுவைத்து நாமும் இன்புறுவோம்.

## கீழ்க்காணும் பத்தியைப் படித்து ஐந்து வினாக்களை உருவாக்குக.

மொழி என்பது மக்கள் படைத்துக் காக்கும் அரியதொரு கலை. மொழியே மக்களின் அறிவை வளர்த்து உயர்த்தும் அரிய கருவியாகவும் உள்ளது. பெற்ற தாயின் முதல் வேட்கை தன் குழந்தையுடன் பேசுதல், அவள் முதலில் அடையும் பெரிய மகிழ்ச்சி, குழந்தையின் பேச்சைக் கேட்பதே ஆகும். குழந்தையின் மனவளர்ச்சியோடு தொடர்புடையது மொழி வளர்ச்சியே ஆகும். மனம் என்பது பெரும்பாலும் மொழியால் வளர்ந்து அமைந்தது. மனத்தின் வளர்ச்சிக்கு ஏற்பவே பேசுவோரின் மொழியும் வளர்ச்சி பெற்று நிற்கும். மக்கள் அனைவரும் மொழிக்கு ஆசிரியராகவும் உள்ளனர்; மாணவராகவும் உள்ளனர். மொழியை வளர்ப்பவரும் மக்களே; மொழியால் வளர்பவரும் மக்களே.

**- மொழி வரலாறு** (மு.வரதராசனார்)

**வினாக்கள்**

1. **மக்கள் படைத்துக் காத்துவரும் அரியகலை எது? அஃது ஆற்றும் செயல் யாது?**
2. **தாயின் முதல் விருப்பம் என்ன?**
3. **மொழி வளர்ச்சி எதனோடு தொடர்புடையது?**
4. **மொழியை வளர்ப்பவரும், வளர்பவரும் யார்?**
5. **மொழி வளர்ச்சி எதனைப் பொறுத்தது?**

## கீழ்க்காணும் பத்தியைப் படித்து வினாக்களுக்குரிய விடை தருக

மொழி என்பது மக்கள் படைத்துக் காக்கும் அரியதொரு கலை. மொழியே மக்களின் அறிவை வளர்த்து உயர்த்தும் அரிய கருவியாகவும் உள்ளது. பெற்ற தாயின் முதல் வேட்கை தன் குழந்தையுடன் பேசுதல். அவள் முதலில் அடையும் பெரிய மகிழ்ச்சி. குழந்தையின் பேச்சைக் கேட்பதே ஆகும். குழந்தையின் மனவளர்ச்சியோடு தொடர்புடையது மொழி வளர்ச்சியே ஆகும். மனம் என்பது பெரும்பாலும் மொழியால் வளர்ந்து அமைந்தது. மனத்தின் வளர்ச்சிக்கு ஏற்பவே பேசுவோரின் மொழியும் வளர்ச்சி பெற்று நிற்கும். **(ஆகஸ்ட்.**2021)

**வினாக்கள்:**

1. **குழந்தையின் மனவளர்ச்சி எதனுடன் தொடர்புடையது?**

   குழந்தையின் மனவளர்ச்சியோடு தொடர்புடையது மொழி வளர்ச்சியே ஆகும்.

2. மொழி என்பது மக்கள் படைத்துக் காக்கும் **அரியதொரு கலை** ஆகும்.

3. **தாயின் முதல் வேட்கையாக இருப்பது என்ன?**

   தாயின் முதல் வேட்கையாக இருப்பது தன் குழந்தையுடன் பேசுதல்.

4. **மொழி எவ்வாறு வளர்ச்சி பெறும்?**

   மனத்தின் வளர்ச்சிக்கு ஏற்பவே பேசுவோரின் மொழியும் வளர்ச்சி பெற்று நிற்கும்

---

## உவமைத் தொடர்களைச் சொற்றொடர்களில் அமைத்து எழுதுக.

தாமரை இலை நீர் போல, கிணற்றுத்தவளை போல, எலியும் பூனையும் போல, அச்சாணி இல்லாத தேர் போல, உள்ளங்கை நெல்லிக்கனி போல

1. **தாமரை இலை நீர்போல** - பட்டும் படாமலும், ஈடுபாடு இல்லாமலும் இருத்தல்

   உலகத்தாரோடு இணைந்தே வாழ்ந்தாலும் துறவிகள், தாமரை இலை நீர் போல விருப்பு வெறுப்பின்றி பட்டும் படாமலும் வாழ்வர்.

2. **கிணற்றுத் தவளை போல** -வெளி உலகம் தெரியாத நிலை **(பெ.ஆ.க.4, மார்ச்.25)**

   கல்வியறிவற்றோர் நாட்டு நடப்புகளை அறியாமல் கிணற்றுத்தவளை போல் வாழ்கின்றனர்.

3. **எலியும் பூனையும் போல** -எதிரியாக **(செப்.20)**

   ரகுவும், ரவியும் எலியும் பூனையும் போலச் சண்டையிட்டுக் கொண்டனர்.

4. **அச்சாணி இல்லாத தேர்போல** -சரியான வழிகாட்டி இல்லாத **(மார்ச்.20)**

   நாட்டை வழிநடத்த சரியான தலைவன் இல்லாததால் நாட்டு மக்கள் அச்சாணி இல்லாத தேர்போலச் சரிவர இயங்க முடியாமல் தவிக்கின்றனர்.

5. **உள்ளங்கை நெல்லிக்கனி போல** - வெளிப்படையாக, தெளிவாக **(செப்.20, ஜீன்.23)**

   தமிழாசிரியர் கற்பித்த புணர்ச்சி இலக்கணம் எங்களுக்கு உள்ளங்கை நெல்லிக்கனி போலத் தெளிவாய் விளங்கியது.


6. **நகமும் சதையும் போல** -இணை பிரியாமை **(மார்ச்.20)**

   நானும் என் அண்ணனும் நகமும் சதையும் போல இருந்தோம்.

# மொழியோடு விளையாடு (பக்கம் – 19)

## எண்ணங்களை எழுத்தாக்குக.

ஆதி மனிதன் நாடோடியாக வாழ்ந்தான். இரவு நேரங்களிலும், இயற்கைச் சீற்றங்களிலும் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள குகைகளில் தங்கினான். கூர்மையான கற்களை வேட்டையாடுவதற்கான கருவிகளாக அவன் பயன்படுத்தினான். வேட்டையாடி, உணவுண்ட பின் ஓய்வு நேரத்தில் தன் வாழ்வியல் அனுபவங்களைத் தான் தங்கிய பாறைக் குகைகளில் சித்திரங்களாகச் செதுக்கினான். அவை பெரும்பாலும் அவன் கண்ட, வேட்டையாடிய விலங்குகளைக் குறிப்பதாக அமைந்திருக்கக் காணலாம்.



## அந்தாதித் தொடரால் கவித்துவமாக்குக.

குழந்தையைக் கொஞ்சும் தாயின் குரல்
தாயின் குரலில் உயிரின் ஒலி
**உயிரின் ஒலிதரும் ஆனந்தம் கேட்டிட,**
**கேட்டிட உவகை வந்து பாயுமே!**

## குறிப்புகளில் மறைந்திருக்கும் தமிழறிஞர்களைக் கண்டுபிடிப்போம்.

**எ.கா. கவிஞர்; ஈற்றிரு சொல்லால் அணிகலன் செய்யலாம் - கவிமணி**

1. தமிழறிஞர்; முதலிரு எழுத்துகளால் மறைக்கலாம். - **மறைமலை அடிகள்** (மார்ச்.25)
2. தாய்மொழி; ஈற்றிரு எழுத்துகள் வெளிச்சம் தரும். - **தமிழ் ஒளி**
3. சிறுகதை ஆசிரியர்; முதல் பாதி நவீனம் - **புதுமைப்பித்தன்**
4. முன்னெழுத்து அரசன்; பின்னெழுத்து தமிழ் மாதம் - **கோதை** **(செப்-21)**

(தமிழ்ஒளி, அம்பை, கோதை, அசோகமித்திரன், புதுமைப்பித்தன், சூடாமணி, ஜெயகாந்தன், மறைமலை அடிகள்)

## கதையைத் தொடர்ந்து நிறைவு செய்க.

வேப்பமரத்தால் ஆன மரப்பாச்சி பொம்மை ஒன்று என் வீட்டில் நெடுங்காலமாக இருந்தது. மிகுந்த அன்போடு அதற்கு என் பெயரை வைத்திருந்தேன். எத்தனையோ வாசனைகளை அதன்மீது பூசினேன். ஆனாலும் அந்தக் கசப்பின் வாசம் போகவில்லை. இரவில் அதன் மெல்லிய விம்மல் ஓசை கேட்கும்...

தொடர்ந்து இரவில் அதன் மெல்லிய விம்மல் ஓசை கேட்டுக் கொண்டிருப்பதால் கொஞ்சம் கொஞ்சமாக அச்சம் என்னைத் தொற்றிக் கொண்டது. வீட்டில் யாரும் அதைப் பற்றி பேசியதாகத் தெரியவில்லை.

பகல் முழுவதும் அதனை என் கையிலே வைத்துக் கொஞ்சிக்கொஞ்சி விளையாடும் போதெல்லாம், அதற்குச் சுவையான உணவுகளை ஊட்டி விடும்போதெல்லாம் கேட்காத அந்த விம்மல் சத்தம் இரவு மட்டும் அந்த மரப்பாச்சி பொம்மையிடம் இருந்து வருவதைக் கேட்கையில் என் இதயம் ‘படக் படக்’ என்று அடிக்கும்.

எப்படியாவது இன்று இரவு சத்தம் வருவதை நேரடியாகப் பார்த்து விட வேண்டும் என்று ஆர்வத்தில் ஓசை வரும் பக்கம் நோக்கிக் காலடியை எடுத்து வைத்தேன். மனதிலே கொஞ்சம் பயம் படர மரப்பாச்சியின் கண்கள் என்னையே பார்ப்பது போல இருந்தது. மரப்பாச்சியின் கை என்னைப் பற்றிப் பிடிப்பது போலத் தோன்ற 'வெட வெட' என் உடல் நடுங்க, முகம் வெளிர, உடல் எல்லாம் வியர்வை துளிர்க்க முன் வைத்த காலை அப்படியே பின்னுக்கு வைத்து படுக்கையில் படுத்தேன். மனம் எல்லாம் மரப்பாச்சி பொம்மை படர்ந்து நிற்க பயம் அதிகரித்தது. எப்படித் தூங்கினேன் என்றே தெரியவில்லை.

மறுநாள் காலையில் எழுந்ததும் முதல் வேலையாக மரப்பாச்சிப் பொம்மையைக் கையில் எடுத்தேன். இரவு எதுவுமே நடக்காகதது போல அது எப்பொழுதும் போல என்னை அன்பாகப் பார்த்தது. அன்று முழுவதும் அதனுடன் மகிழ்வோடு விளையாடிவிட்டு அதற்கு நான் உண்ட உணவை எல்லாம் வழக்கம்போல மாலையானதும் அதற்குரிய இடத்தில் வைத்துவிட்டு, படித்து முடித்துச் சாப்பிட்டு விட்டுத் தூங்கத் தயாரானேன். அப்போது மரப்பாச்சி பொம்மை வைத்திருக்கும் இடத்தில் இருந்து விம்மல் சத்தம் வர தைரியத்தை வரவழைத்து மரப்பாச்சி பொம்மையின் அருகில் செல்ல விளக்கைப் போட்டதும் மரப்பாச்சி பொம்மை மீதிருந்த எலி ஒன்று ஓடியது. இப்போது புரிந்தது. அதன்மீது ஒட்டியிருந்த உணவை உண்ண வந்த எலியின் ஓசைதான் விம்மல் என்று. நிம்மதியாகப் படுக்கையில் படுத்து உறங்கினேன்.

## நிற்க அதற்குத் தக.

குறிப்பேடுகள் உருவாக்குதல், சேகரிப்பு, ஏதேனும் கலை பயில

| | |
|---|---|
| கலைகளில் உங்களுக்குப் பிடித்த வடிவங்கள் எவை? காரணம் என்ன? | **எழுத்து, ஓவியம், சிற்பம் முதலிய கலை வடிவங்கள் எனக்குப் பிடித்தவை. காரணம், ஒன்றைப் புதிதாகப் படைக்கும் வல்லமையும் உள்ளத்தில் மகிழ்வையும் தருகிறது.** |
| நீங்கள் எந்தக் கலையில் வல்லவர்? | **ஓவியக்கலை** |
| ஏதேனும் கலை பயில நினைத்தால் உங்கள் தேர்வு எதுவாக இருக்கும்? | **சிற்பக்கலை** |
| பொழுதுபோக்காகப் பொருள்களைச் சேகரிப்பதில் ஆர்வம் உண்டா? ஆம் எனில் எவையெவை எனக் குறிப்பிடுக. எ.கா. அஞ்சல்தலை, நாணயங்கள் | **உண்டு. பழங்கால நாணயங்கள், பழந்தமிழ் நூல்கள், திரைப்படச் சேகரிப்புகளில் எனக்கு ஆர்வம் உண்டு.** |
| பொன்மொழிகள், குறிப்புகள் ஆகியவற்றைத் தேர்ந்தெடுத்து எழுதிக் குறிப்பேடு தயாரிக்கும் வழக்கம் உண்டா? ஆம் எனில் அவை எத்தகையவை எனக் குறிப்பிடுக. | **உண்டு. தன்னம்பிக்கையைத் தூண்டும் பொன்மொழிகள், குறிப்புகள் ஆகியவற்றைத் தேர்ந்தெடுத்து குறிப்பேடு தயாரித்து வைத்துள்ளேன்.** |
| நாள்குறிப்பு எழுதுவீர்களா? ஆம் எனில் எத்தகைய குறிப்புகளை எழுதுவீர்கள்? | **ஆம். நாள்தோறும் வகுப்பறையில் நிகழும் செயல்களை, பள்ளியில் நடைபெற்ற நிகழ்வுகளை நாள்குறிப்பில் எழுதி வைக்கிறேன்.** |

## படிப்போம் பயன்படுத்துவோம் (நூலகம்)

**Anthropology** - மானுடவியல்
**Archaelogy** - தொல்லியல்
**Research** - ஆராய்ச்சி
**Subscription** - சந்தா (மார்ச்.25)
**Fine Arts** - கவின்கலைகள்
**Field Study** - கள ஆய்வு
**Epigraphy** - கல்வெட்டியல்

# கூடுதல் வினாக்கள்

கவிதைப்பேழை

இயல் 1

## தன்னேர் இலாத தமிழ்

(தண்டியலங்கார உரை மேற்கோள் பாடல்) – தண்டி

### பலவுள் தெரிக.

1. **அணியிலக்கணத்தை மட்டும் கூறும் இலக்கண நூல்**
அ) முத்துவீரியம் ஆ) வீரசோழியம்
இ) மாறனலங்காரம் ஈ) இலக்கண விளக்கம்
**[இ) மாறனலங்காரம்]**

2. **கீழ்க்காண்பவற்றுள் 'வினையாலணையும் பெயர்' எது?**
அ) உயர்ந்தோர் ஆ) வந்தான்
இ) நடப்பான் ஈ) உயர்ந்து
**[அ) உயர்ந்தோர்]**

3. **'ஈறுபோதல்', 'முன்னின்ற மெய் திரிதல்' இச்சொல்லுக்குரிய புணர்ச்சி விதி**
அ) கருங்குயில் ஆ) வெங்கதிர்
இ) நெடுந்தேர் ஈ) முதுமரம்
**[ஆ) வெங்கதிர்]**

4. **'விளங்கி' - இச்சொல்லின் சரியான பகுபத உறுப்பிலக்கண பிரிப்பு**
அ) விள + ங் + க் + இய
ஆ) விளங்கு + க் + ய் + அ
இ) விளங்கு + இய ஈ) விளங்கு + இ
**[ஈ) விளங்கு + இ]**

5. **தண்டியலங்காரம் கொண்டுள்ள பிரிவு**
அ) மூன்று ஆ) ஏழு
இ) ஐந்து ஈ) நான்கு **[அ)மூன்று]**

6. **தண்டியலங்காரம் எந்நூலைத் தழுவி எழுதப்பட்டது.**
அ) காவியதர்சம் ஆ) மாறனலங்காரம்
இ) வீரசோழியம் ஈ) குவலயானந்தம்
**[அ) காவியதர்சம்]**

7. **தண்டியலங்கார ஆசிரியரின் காலம்**
அ) கி.பி.13 ஆ) கி.பி. 10
இ) கி.பி.12 ஈ) கி.பி.9 **[இ) கி.பி.12]**

8. **தமிழ்மொழி தோன்றிய மலையாகச் சொல்லப்படுவது**
அ) பறம்பு மலை ஆ) நளிமலை
இ) பொதிய மலை ஈ) விந்திய மலை
**[இ) பொதிய மலை]**

9. **தண்டியலங்காரத்தை எழுதியவர்**
அ) தண்டி ஆ) மாறன்
இ) அகத்தியர் ஈ) பவணந்தி **[அ) தண்டி]**

10. **உரையாசிரியர்கள் பலரால் எடுத்தாளப்பட்ட பாடல் இடம் பெற்ற நூல்**
அ) குவலயானந்தம் ஆ) மாறனலங்காரம்
இ) முத்து வீரியம் ஈ) தண்டியலங்காரம்
**[ஈ) தண்டியலங்காரம்]**

11. **தண்டியலரங்கார உரைமேற்கோள் பாடல் இடம் பெற்றுள்ள பகுதி**
அ) பொதுவியல் ஆ) பொருளணியியல்
இ) சொல்லணியியல்
**[ஆ) பொருளணியியல்]**

## கருத்து சரியா? தவறா

1. **கருத்து 1 : மக்களின் அறியாமையை அகற்றுவது தமிழ்மொழியாகும்.**
**கருத்து 2 : புற இருளைப் போக்க கதிரவன் உதவும்.**
அ) இரண்டு கருத்தும் சரி ஆ) கருத்து 1 சரி, 2 தவறு
இ) கருத்து 1 தவறு, 2 சரி ஈ) இரண்டு கருத்தும் தவறு **[அ) இரண்டு கருத்தும் சரி]**

2. **கருத்து 1 : 'தொன்னூல் விளக்கம்' அணியிலக்கணத்தை மட்டுமே கூறும் நூல்**
**கருத்து 2 : 'குவலயானந்தம்' என்னும் நூல் முழுமையான இலக்கண நூல்**
அ) இரண்டு கருத்தும் சரி ஆ) இரண்டு கருத்தும் தவறு
இ) கருத்து 1 தவறு, 2 சரி ஈ) இவற்றில் எதுவுமில்லை **[ஆ) இரண்டு கருத்தும் தவறு]**

## சரியானதைத் தேர்க.

1. **அ) வீரசோழியம்** - நாவல்
**ஆ) முத்து வீரியம்** -சிறுகதை
**இ) குவலயானந்தம்** -அணியிலக்கணம்
**ஈ) மாறனலங்காரம்** -சொல்லிணக்கணம் **[இ) குவலயானந்தம் - அணியிலக்கணம்]**

2. **அ) வந்து** -பெயரெச்சம்
**ஆ) உயர்ந்தோர்** -பலர்பால் வினைமுற்று
**இ) இலாத** -ஈறுகெட்ட எதிர்மறை பெயரெச்சம்
**ஈ) வெங்கதிர்** -பண்புத்தொகை **[ஈ) வெங்கதிர் - பண்புத்தொகை]**

## பொருந்தாததைத் தேர்க.

1. **அ) தமிழ்மொழி** -பொதிய மலை
**ஆ) தொல்காப்பியம்** -இலக்கண நூல்
**இ) தண்டியலங்காரம்** -தண்டி
**ஈ) காவியதர்சம்** - தமிழ்மொழி இலக்கண நூல் **[ஈ) காவியதர்சம் - தமிழ்மொழி இலக்கணநூல்]**

## பொருத்துக.

1. **அ) வெங்கதிர்** - 1. இடைக்குறை
**ஆ) இலாத** - 2. வினையெச்சம்
**இ) வந்து** -3. வினையாலணையும் பெயர்
**ஈ) உயர்ந்தோர்** -4. பண்புத்தொகை
அ) 4 2 3 1 ஆ) 4 1 3 2 இ) 4 1 2 3 ஈ) 2 3 1 4 **[இ) 4 1 2 3]**

## குறுவினா

1. **தண்டிலயலங்கார நூலைப் பற்றிச் சிறுகுறிப்பு தருக.**
   - அணி இலக்கணத்தைக் கூறும் சிறப்பான நூல்களில் ஒன்று தண்டியலங்காரமாகும். 'காவியதர்சம்' என்னும் வடமொழி இலக்கண நூலைத் தழுவி எழுதப்பட்ட நூலாகும். இந்நூலை எழுதியவர் தண்டி ஆவார். இவரது காலம் கி.பி.12-ஆம் நூற்றாண்டு. தண்டியலங்காரம் பொதுவியல், பொருளணியியல், சொல்லணியியல் என மூன்று பெரும் பிரிவுகளை உடையது.

2. **அணியிலக்கணத்தை மட்டும் கூறும் இலக்கண நூல்கள் யாவை?**
   - தண்டியலங்காரம், மாறனலங்காரம், குவலயானந்தம்

---

3. **பிற இலக்கணங்களோடு அணியிலக்கணத்தையும் இணைத்துக் கூறும் நூல்கள் யாவை?**
   - தொல்காப்பியம், வீரசோழியம், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், முத்து வீரியம்.

---

4. **இருளகற்றும் - புணர்ச்சி விதி தருக.**
   **இருள் + அகற்றும்**
   உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே என்னும் விதிப்படி 'இருளகற்றும்' என்று ஆனது.

---

## சிறுவினா

1. **தன்னேர் இலாத தமிழின் சிறப்பு குறித்துத் தண்டியலங்கார உரை மேற்கோள் பாடல் உணர்த்தும் செய்தி யாது?**
   - இந்நில உலகில் வாழும் மக்கள் அனைவராலும் போற்றப்பட்டு, உயர்ந்த மலைகளுக்கு இடையே தோன்றி, எப்போதும் ஒலித்துக் கொண்டிருக்கும் கடலால் சூழப்பட்ட உலகத்தின் புற இருளை அகற்றுவது கதிரவனாகும்.
   - குளிர்ச்சி பொருந்திய பொதியமலையில் தோன்றி, சான்றோர்களால் தொழப்பட்டு, மக்களின் அறியாமை என்னும் அக இருளைப் போக்குவதும் எதனோடும் ஒப்பிட்டுக் கூற முடியாததுமான மொழி தமிழ்மொழி ஆகும். புறஇருளைப் போக்கும் கதிரவனை விட தமிழ்மொழி தனக்கு நிகரில்லாத மொழி என்று தண்டியலங்கார உரை மேற்கோள் பாடல் உணர்த்துகின்றது.

---

## உரைநடை உலகம்

## இயல் 1

## நமது மொழியின் அடையாளங்களை மீட்டவர்

## பலவுள் தெரிக.

1. **கூற்று 1** : தமிழறிஞர் கமில சுவலபில் மயிலையாரைத் தம் குருவாகவே மதித்துப் போற்றினார்.
   **கூற்று 2** : மயிலையாரின் ஆராய்ச்சி வண்மையைப் பாரதியார் புகழ்ந்து பாடியுள்ளார்.
   அ) கூற்று இரண்டும் சரி
   ஆ) கூற்று இரண்டும் தவறு
   இ) கூற்று 1 சரி 2 தவறு
   ஈ) கூற்று 1 தவறு 2 சரி
   **[அ) கூற்று இரண்டும் சரி]**

---

2. **மயிலை சீனி. வேங்கடசாமியின் எந்த நூல் தமிழக அரசின் முதற்பரிசினைப் பெற்றது?**
   அ) களப்பிரர் ஆட்சியில் தமிழகம்
   ஆ) தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்
   இ) மாமல்லபுரத்து சைன சிற்பங்கள்
   ஈ) மறைந்து போன தமிழ் நூல்கள்
   **[ஆ) தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்]**

---

3. **மயிலை சீனி.வேங்கடசாமி கூறாத கூற்று ஏது?**
   அ) தமிழ்ப்பற்று முன்னோர் வழியாக எனக்குக் கிடைத்த சீதனம்.
   ஆ) 'கலை கலை' என்று இப்போது கூறப்படுகிறதெல்லாம் சினிமாக்கலை, இசைக்கலை பற்றியே.
   இ) நான் கதைகளையும் நவீனங்களையும் எழுதுகிறவன்.
   ஈ) ஆராய்ச்சி நூல்களைப் பெரும்பான்மையோர் படிப்பதில்லை.
   **[இ) நான் கதைகளையும் நவீனங்களையும் எழுதுகிறவன்]**

4. **கூற்று** : மயிலை சீனி வேங்கடசாமியின் முதல் நூல் 'கிறித்துவமும் தமிழும்'
**காரணம்** : ச.த.சற்குணர் ஆற்றிய 'கிறித்துவமும் தமிழும்' என்னும் உரையே மயிலையாரின் முதல் நூல் தோன்றக் காரணம்
அ) கூற்றும் காரணமும் தவறு
ஆ) கூற்று சரி காரணம் தவறு
இ) கூற்று தவறு காரணம் சரி
ஈ) கூற்றும் காரணமும் சரி

**[ஈ) கூற்றும் காரணமும் சரி]**

5. **தொடர் 1** : சங்ககாலத்துக்குப் பிற்பட்ட காலத்தில் தமிழகத்தைக் களப்பிரர்கள் என்ற மன்னர்கள் ஆட்சி புரிந்தனர்.
**தொடர் 2** : களப்பிரர்கள் காலம் தமிழக வரலாற்றின் பொற்காலம்.
அ) தொடர் 1 சரி, தொடர் 2 தவறு
ஆ) தொடர் 1 தவறு, தொடர் 2 தவறு
இ) தொடர் 1 சரி, தொடர் 2 சரி
ஈ) தொடர் 1 தவறு, தொடர் 2 சரி

**[அ) தொடர் 1 சரி, தொடர் 2 தவறு]**

6. **கூற்று** : மயிலையார் தம் நூலின் படங்களைத் தானே வரைவார்.
**காரணம்** : மயிலையார் ஓர் ஓவிய ஆசிரியர்
அ) கூற்று சரி, காரணம் சரி
ஆ) கூற்று சரி, காரணம் தவறு
இ) கூற்று தவறு, காரணம் சரி
ஈ) கூற்ற தவறு, காரணம் தவறு

**[ஆ) கூற்று சரி, காரணம் தவறு]**

7. **பொருந்தாததை எழுதுக.**
அ) சீனிவாசன் - சித்தமருத்துவர்
ஆ) கோவிந்தராசன் - தமிழாசிரியர்
இ) ச.த.சற்குணர் - ஓவியர்
ஈ) மயிலை சீனி.வேங்கடசாமி - ஆராய்ச்சிப் பேரறிஞர்

**[இ) ச.த.சற்குணர் - ஓவியர்]**

8. **கவின்கலைகள் குறித்துத் தமிழில் வெளியான முழுமையான முதல்நூல் எது?**
அ) நுண்கலைகள்
ஆ) தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்
இ) இசைவாணர் கதைகள்
ஈ) இறைவன் ஆடிய எழுவகைத் தாண்டவம்

**[ஆ) தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்]**

9. **'மத்த விலாசம்' என்னும் நூலை இயற்றியவர் யார்?**
அ) சுவாமி விபுலானந்தர்
ஆ) மகேந்திரவர்மன்
இ) தெ.பொ.மீனாட்சி சுந்தரனார்
ஈ) மயிலை சீனி. வேங்கடசாமி

**[ஆ) மகேந்திரவர்மன்]**

10. **'மத்தவிலாசம்' என்னும் நூலை ஆங்கிலம் வழியாகத் தமிழாக்கம் செய்தவர் யார்?**
அ) ச.த.சற்குணர் ஆ) மகேந்திரவர்மன்
இ) மயிலை சீனி.வேங்கடசாமி
ஈ) சுவாமி விபுலானந்தர்

**[இ) மயிலை சீனி.வேங்கடசாமி]**

11. **"தாங்கெட நேர்ந்த போதும் தமிழ்கெடலாற்றா அண்ணல்" - என்று பாவேந்தரால் புகழப்படுபவர் யார்?**
அ) பாரதிதாசன் ஆ) பாரதியார்
இ) திரு.வி.க.
ஈ) மயிலை சீனி வேங்கடசாமி

**[ஈ) மயிலை சீனி வேங்கடசாமி]**

12. **கூற்று** : மயிலையார் சாசனங்களை எளிதாகப் படிக்கும் திறன் உடையவர்.
**காரணம்** : மயிலையர் ஓவியக்கலையில் தேர்ச்சியுடையவராக இருந்தார்.
அ) கூற்று தவறு; காரணம் சரி
ஆ) கூற்று சரி; காரணம் சரி
இ) கூற்று தவறு; காரணம் தவறு
ஈ) கூற்று சரி; காரணம் தவறு

**[ஈ) கூற்று சரி; காரணம் தவறு]**

13. **பொருத்தமானதை எழுதுக.**
அ) மயிலையார் வட்டெழுத்து, கோலெழுத்து, தமிழ் பிராமி ஆகியவற்றில் புலமைபெறாதவர்.
ஆ) மயிலையார் பட்டக் கல்வி பெறாதவர்.
இ) மயிலையர் பள்ளி ஆசிரியர் பணியை மேற்கொள்ளாதவர்.
ஈ) மயிலையார் சமஸ்கிருத மொழி பயிற்சியற்றவர்.

**[ஆ) மயிலையார் பட்டக் கல்வி பெறாதவர்]**

**14. மயிலை சீனி வேங்கடசாமி இயற்றிய முதல் நூல்**

அ) பௌத்தமும் தமிழும்

ஆ) சமணமும் தமிழும்

இ) கிறித்துவமும் தமிழும்

ஈ) தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்

**[இ) கிறித்துவமும் தமிழும்]**

**15. தமிழர்களின் வரலாற்றில் 'இருண்ட காலம்' என்று அழைக்கப்படுவது**

அ) சேரர்களின் காலம்

ஆ) சங்க இலக்கிய காலம்

இ) பாண்டியர்களின் காலம்

ஈ) களப்பிரர்களின் காலம்

**[ஈ) களப்பிரர்களின் காலம்]**

**16. சங்ககாலப் பசும்பூண் பாண்டியன் கொடியில் இடம்பெற்ற சின்னம்**

அ) வில் ஆ) யானை இ) புலி ஈ) மீன்

**[ஆ) யானை]**

## குறுவினா

**1. மயிலை சீனி.வேங்கடசாமி எத்துறைகளில் ஆய்வு புரிந்தார்?**

- சமூகம், மானுடவியல், தமிழக வரலாறு, தொல்பொருள் ஆய்வு, கலை வரலாறு, மொழி, கல்வெட்டு, இலக்கியம் ஆகிய துறைகளில் மயிலை சீனி. வேங்கடசாமி ஆய்வு புரிந்தார்.

**2. மயிலை சீனி வேங்கடசாமியின் பிறப்பு, தந்தை, தமையனார் குறித்து எழுதுக.**

- மயிலை சீனி வேங்கடசாமி 16.12.1900-ஆம் ஆண்டு சென்னை மயிலாப்பூரில் பிறந்தார்.
- இவரின் தந்தை சீனிவாசன் சித்த மருத்துவர் ஆவார். தமையனார் கோவிந்தராசன் தமிழாசிரியர் ஆவார்.

**3. மயிலையார், வரலாற்று ஆய்வாளராக உருவாக அடிப்படையாக அமைந்தவை எவை?**

- மயிலையாரின் தந்தை சீனிவாசனின் சித்த மருத்துவப் பின்புலமும் தமையனார் கோவிந்தராசனின் தமிழ்ப் பின்புலமும், மயிலையார் வரலாற்று ஆய்வாளராக உருவாக அடிப்படையாக அமைந்தன.

**4. மயிலையார் தொடர்பு கொண்டிருந்த அறிஞர் பெருமக்கள் யாவர்?**

- விபுலானந்த அடிகள்
- திரு.வி.க.
- ச.த.சற்குணர்
- கா.சுப்பிரமணியர்
- தெ.பொ.மீனாட்சி சுந்தரனார்

**5. மயிலையார், 'கிறிஸ்தவமும் தமிழும்' என்னும் நூலை எழுதக் காரணமாக அமைந்த நிகழ்வு யாது?**

- 1934-இல் தெ.பொ.மீனாட்சி சுந்தரனார் சிந்தாதிரிப் பேட்டை உயர்நிலைப்பள்ளியில் நடத்திய தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் ச.த.சற்குணர், 'கிறிஸ்தவமும் தமிழும்' என்ற பொருளில் ஆற்றிய உரையே மயிலையார், 'கிறிஸ்தவமும் தமிழும்' என்னும் நூல் எழுதக் காரணமாக அமைந்தது.

**6. மயிலையார் எழுதிய வரலாற்று ஆய்வு நூல்கள் யாவை?**

- மகேந்திரவர்மன்
- நரசிம்மவர்மன்
- மூன்றாம் நந்திவர்மன்
- சங்ககாலத் தமிழக வரலாற்றில் சில செய்திகள்
- பழங்காலத் தமிழர் வாணிகம்
- களப்பிரர் ஆட்சியில் தமிழகம்
- கொங்கு நாட்டு வரலாறு
- தமிழ்நாட்டு வரலாறு- சங்ககாலம் (அரசியல்)

**7. மயிலையார் இயற்றிய கலையியல் ஆய்வு நூல்கள் யாவை?**

- தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்
- நுண் கலைகள்
- இறைவன் ஆடிய எழுவகைத் தாண்டவம்
- இசைவாணர் கதைகள்

**8. மயிலையார் எவ்வெம் மொழிகளில் பயிற்சியுடையவர்?**

- மலையாளம்
- கன்னடம்
- சமஸ்கிருதம்
- பாலி
- ஆங்கிலம்

**9. மயிலையார் பெற்ற விருது எது? அது யாரால் வழங்கப்பட்டது?**

- மயிலையார் பெற்ற விருது தமிழ்ப் பேரவைச் செம்மல் என்பதாகும்.
- இவ்விருது மதுரைக் காமராசர் பல்கலைக் கழகத்தாரால் வழங்கப்பட்டது.

**10. மயிலையார் பெற்ற பட்டம் எது? அது எங்கு எப்போது வழங்கப்பட்டது?**

- மயிலையார் பெற்ற பட்டம் ஆராய்ச்சிப் பேரறிஞர் என்பதாகும்.
- சென்னை கோகலே மண்டபத்தில் நடைபெற்ற மயிலையாரின் மணிவிழாவில் இப்பட்டம் அறிஞர் பெருமக்களால் வழங்கப்பட்டது.

**11. மயிலை சீனி வேங்கடசாமி அவர்கள் ஆற்றிய பணிகள் யாவை?**

- இதழாசிரியர்
- தொடக்கப்பள்ளி ஆசிரியர்
- பல்துறை ஆய்வாளர்

**12. மயிலையார் வருந்திக் கூறுவது யாது?**

- ''நான் கதைகளையும் நவீனங்களையும் எழுதுகிறவன் அல்லன். வரலாற்று ஆராய்ச்சி, தமிழ் இலக்கிய ஆராய்ச்சி நூல்களை எழுதுகிறவன்'' என்பார்.
- ''ஆராய்ச்சி நூல்களைப் பெரும்பான்மையோர் படிப்பதில்லை. இதை மிகச் சிறுபான்மையோரே படிக்கின்றனர் என்பதை நன்றாகத் தெரிந்தே ஆராய்ச்சி நூல்களை எழுதுகிறேன்'' என்பார்.

**13. மயிலை சீனி வேங்கடசாமி இயற்றிய நூல்களைப் பட்டியலிடுக.**

- சங்ககாலத் தமிழக வரலாற்றில் சில செய்திகள்.
- பழங்காலத் தமிழர் வாணிகம்
- களப்பிரர் ஆட்சியில் தமிழகம்
- சேரன் செங்குட்டுவன்
- மகேந்திரவர்மன்
- நரசிம்மவர்மன்
- மூன்றாம் நந்திவர்மன்
- கொங்குநாட்டு வரலாறு
- துளுநாட்டு வரலாறு
- 19-ஆம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியம்
- மறைந்து போன தமிழ் நூல்கள்
- அஞ்சிறைத் தும்பி
- பௌத்தமும் தமிழும்
- சமணமும் தமிழும்
- கிறித்துவமும் தமிழும்
- தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்
- நுண் கலைகள்
- இறைவன் ஆடிய எழுவகைத் தாண்டவம்

**14. தமிழின வரலாற்றை எவற்றின் அடிப்படையில் மயிலைநாதர் தொகுத்து எழுதினார்?**

- இலக்கியம், தொல்லியல், கல்வெட்டு, பண்பாடு ஆகிய தரவுகளின் அடிப்படையில் தமிழின வரலாற்றை மயிலைநாதர் தொகுத்து எழுதினார்.

**15. மயிலைநாதர் கவனம் செலுத்திய துறைகள் யாவை?**

- சமயம், மானுடவியல், தமிழக வரலாறு, தொல்பொருள் ஆய்வு, கலை வரலாறு, மொழியாய்வு முதலான துறைகளில் மயிலைநாதர் கவனம் செலுத்தினார்.

**16. மயிலைநாதர் இயற்றிய கலை பற்றிய பிறநூல்கள் யாவை?**

- இறைவன் ஆடிய எழுவகைத் தாண்டவம்
- நுண்கலைகள்
- இசைவாணர் கதைகள்

**17. 'தமிழ்நாட்டு வரலாறு' - நூற்குறிப்பு தருக.**

- தமிழக வரலாற்றினைப் பல கோணங்களில் எடுத்துரைத்த நூல்.
- சங்க இலக்கியங்கள், சிலப்பதிகாரம் முதலிய இலக்கியத் தரவுகளைக் கொண்டு இந்த நூலை மயிலைநாதர் இயற்றியுள்ளார்.

## சிறுவினா

**1. மயிலை சீனி வேங்கடசாமியின் இளமைக்கால வாழ்க்கை குறித்து எழுதுக.**

- மயிலை சீனி வேங்கடசாமி 16.12.1900-ஆம் ஆண்டு சென்னை மயிலாப்பூரில் பிறந்தார். அவரின் தந்தை சீனிவாசன் சித்த மருத்துவராகவும் தமையனார் கோவிந்தராசன் தமிழாசிரியராகவும் விளங்கியமையால் இளம் வயதிலேயே தமிழை நன்கு கற்றறிந்தார்.
- முன்னோர் வழியாகக் கிடைத்த தமிழ்ப்பற்றும் வீட்டிலிருந்த ஏட்டுச் சுவடிகளும் பிற்காலத்தில் அவர் செய்யப்புகுந்த இலக்கிய, வரலாற்றுக் கல்வெட்டு ஆராய்ச்சிக்கு இளமையிலேயே வித்தூன்றின.
- ஓவியக்கல்லூரியில் சேர்ந்து ஓவியம் பயின்ற இவர் அது முழுமை அடையாத நிலையில் ஆசிரியர் பயிற்சி பெற்றுத் தொடக்கப்பள்ளி ஆசிரியரானார்.
- விபுலானந்த அடிகள், கா.சுப்பிரமணியர், திரு.வி.க., தெ.பொ.மீ., ச.த.சற்குணர் ஆகிய அறிஞர்களுடன் கொண்டிருந்த தொடர்பு காரணமாகச் செந்தமிழ்ச் செல்வி, லஷ்மி, ஊழியன், குடியரசு , ஆரம்பாசிரியன் முதலிய இதழ்களில் ஆய்வுக் கட்டுரைகள் எழுதத் தொடங்கினார்.

**2. மயிலை சீனி வேங்கடசாமியின் தொடக்க கால ஆய்வுகள் பற்றி நீவிர் அறிவன யாவை?**

- 1934-ஆம் ஆண்டு தெ.பொ.மீனாட்சி சுந்தரனார் சிந்தாதிரிப் பேட்டை உயர்நிலைப் பள்ளியில் நடத்திய தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் ச.த.சற்குணர், ‘கிறித்துவமும் தமிழும்’ என்ற பொருள் குறித்து உரையாற்றினார். அவ்வுரையே மயிலையாரின் முதல் நூலான ‘கிறித்துவமும் தமிழும்’ என்னும் நூல் வெளிவரக் காரணமாக அமைந்தது.
- தமிழின் தொல் இலக்கியம், தொல்லெழுத்து, தொல்கலை ஆகியவற்றில் கொண்ட ஈடுபாடு காரணமாக ‘பௌத்தமும் தமிழும்’, ‘சமணமும் தமிழும்’ ஆகிய நூல்களைக் காழ்ப்புணர்வின்றி நடுநிலை நின்று படைத்தார்.
- வட்டெழுத்து, கோலெழுத்து, தமிழ் பிராமி ஆகியவற்றில் அவர் பெற்றிருந்த புலமை, சாசனங்களை எளிதாகப் படிக்கத் துணை நின்றது.
- சமயம், மானுடவியல், தமிழக வரலாறு, தொல்பொருள் ஆய்வு, கலை வரலாறு, மொழியாய்வு, கல்வெட்டு ஆய்வு, இலக்கியம் எனப் பல துறைகளிலும் இவர் ஆய்வுகள் மேற்கொண்டார்.

**3. மயிலை சீனி வேங்கடசாமியே கலையியல் சார்ந்து தமிழில் வெளியான பல நூல்களுக்கு வழிகாட்டி என்பதை நிறுவுக.**

- தமிழரது கலைத்திறனை எடுத்தோதும் ‘தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்’ என்னும் நூல் கவின் கலைகள் குறித்துத் தமிழில் வெளியான முழுமையான முதல்நூல் ஆகும்.
- இறைவன் ஆடிய எழுவகைத் தாண்டவம், நுண்கலைகள், இசைவாணர் கதைகள் ஆகியவை கலைபற்றிய இவருடைய பிறநூல்கள் ஆகும்.
- மயிலையார் தமது நூல்களின் படங்களைத் தானே வரைந்து வெளியிட்டது இவரது கலைத்திறனுக்குச் சான்றாகும்.
- கட்டடம், சிற்பம், ஓவியம் தொடர்பான இவரது ஆய்வுகள் தமிழ்ச் சமூக வரலாற்றுக்குப் புதிய வரவாக அமைந்தன.

**4. மயிலை சீனி வேங்கடசாமியின் வரலாற்று ஆய்வுகள் குறித்து விளக்குக.**

- கி.பி.3 ஆம் நூற்றாண்டு தொடங்கி கி.பி. 9 ஆம் நூற்றாண்டுக்கு இடைப்பட்ட காலங்களில் ஆட்சி புரிந்த மன்னர்களைப் பற்றிய ஆய்வில் ஈடுபட்டார்.
- மகேந்திரவர்மன், நரசிம்மவர்மன் ஆகியோர் குறித்த நூல்களைத் தொடர்ந்து மூன்றாம் நந்திவர்மன் என்னும் பல்லவ மன்னனைப் பற்றியும் எழுதினார்.
- தமிழில் மூன்றாம் நந்திவர்மனைப் பற்றி எழுதிய முதல் நூல் இதுவேயாகும்.
- கொங்குநாட்டு மன்னர்கள், துளுநாட்டு மன்னர்கள், சங்ககால மூவேந்தர்கள், களப்பிரர் மற்றும் இலங்கை குறித்த வரலாற்றினையும் எழுதினார்.
- தமிழர்களின் வரலாற்றில் இருண்டகாலம் என்று குறிப்பிடப்பட்ட களப்பிரர்களின் ஆட்சிக்காலம் பற்றிய புதிய கண்ணோட்டத்தைக் ‘களப்பிரர் ஆட்சியில் தமிழகம்’ என்னும் நூல் மூலம் வெளிப்படுத்தினார்.

கவிதைப்பேழை

# இயல் 1

## இளந்தமிழே!

– சிற்பி பாலசுப்பிரமணியம்

### பலவுள் தெரிக.

1. ‘பொதிகை’ என்பது எந்த மலையைக் குறிக்கும்.
அ) குற்றாலமலை ஆ) விந்தியமலை
இ) இமயமலை ஈ) சாமிமலை
**[அ) குற்றாலமலை]**

2. சிற்பி பாலசுப்பிரமணியம் எந்நூலை மொழிபெயர்த்தமைக்காக சாகித்திய அகாதெமி விருதினைப் பெற்றார்.
அ) அக்கினி ஆ) ஒளிப்பறவை
இ) அக்கினி சாட்சி ஈ) சூரிய நிழல்
**[இ) அக்கினி சாட்சி]**

3. ‘சாய்ப்பான்’ என்பதன் சரியான பகுபத பிரிப்பு முறை
அ) சாய்ப்பு + ஆன் ஆ) சாய் + ப் + ஆன்
இ) சாய் + ப் + ப் + அன்
ஈ) சாய் + ப் + ப் +ஆன் **[ஈ) சாய் + ப் + ப் +ஆன்]**

4. ‘வியர்வை வெள்ளம்’ - இலக்கணக்குறிப்பு
அ) உவமையாகுபெயர்
ஆ) கருவியாகு பெயர்
இ) உருவகம் ஈ) உவமைத்தொகை
**[இ) உருவகம்]**

5. ‘செந்தமிழ்’ - எந்தப் புணர்ச்சி விதிகளின் அடிப்படையில் சரியாகப் புணரும்.
அ) ஈறுபோதல், இனமிகல்
ஆ) ஈறுபோதல், முன்னின்ற மெய்திரிதல்
இ) ஈறுபோதல், தன்னொற்றிரட்டல்
ஈ) ஈறுபோதல்
**[ஆ) ஈறுபோதல், முன்னின்ற மெய்திரிதல்]**

6. சிற்பி எத்தனை முறை சாகித்திய அகாதமி பரிசு பெற்றவர்.
அ)ஒரு முறை ஆ) இருமுறை
இ) நான்கு முறை ஈ) மூன்று முறை
**[ஆ) இருமுறை]**

7. சிற்பியின் கவிதைகள் ஆங்கிலம், கன்னடம், மராத்தி மற்றும் ________________ மொழியில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.
அ) மலையாளம் ஆ) ஹிந்தி
இ) தெலுங்கு ஈ) வங்காளம்
**[அ) மலையாளம்]**

8. இவற்றுள் எது கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் எழுதிய நூல்
அ) சூரியகாந்தி ஆ) சூரிய பார்வை
இ) ஒளிப்பூ ஈ) சூரிய நிழல்
**[ஈ) சூரிய நிழல்]**

9. கருத்து 1 : பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தவள் தமிழ்த்தாய்.
கருத்து 2 : விம்முகின்ற தோள்கள் செந்நிறத்துப் பூக்காடானது.
அ) கருத்து 1 சரி ஆ) கருத்து 2 சரி
இ) இரண்டு கருத்தும் தவறு
ஈ) கருத்து 1 சரி, 2 தவறு
**[ஈ) கருத்து 1 சரி, 2 தவறு]**

10. ‘‘மூண்டுவரும் கவிதைவெறிக் குணவாய் எங்கள் முத்தமிழே! நீயுள்ளாய்; முன்னம் ஓர்நாள்’’
- இப்பாடல் வரியில் பயின்று வந்துள்ள தொடை நயம்
அ) அடிமோனை ஆ) சீர் மோனை
இ) சீர் எதுகை ஈ) அடி எதுகை
**[அ) அடிமோனை]**

11. பொருத்துக.

**அ) அலையும் சுவடும்** - 1. படைப்பிலக்கிய விருது நூல்

**ஆ) ஒரு கிராமத்து நதி** - 2. மொழிபெயர்ப்பு விருது நூல்

**இ) அக்கினி சாட்சி** - 3. கவிதை நூல்

**ஈ) ஒளிப்பறவை** - 4. உரைநடை நூல்

அ) 4 1 2 3 ஆ) 4 2 1 3

இ) 4 3 1 2 ஈ) 4 3 2 1 **[அ) 4 1 2 3]**

12. **'இளந்தமிழே' என்னும் நம் பாடப்பகுதி இடம்பெற்றுள்ள நூல்**

அ) ஒளிப்பறவை ஆ) நிலவுப்பூ

இ) சூரியநிழல் ஈ) சூரியகாந்தி

**[ஆ) நிலவுப்பூ]**

13. **கவிஞர் சிற்பி எந்தப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றினார்.**

அ) காமராசர் பல்கலைக்கழகம்

ஆ) அழகப்பா பல்கலைக்கழகம்

இ) தமிழ்ப்பல்கலைக்கழகம்

ஈ) பாரதியார் பல்கலைக்கழகம்

**[ஈ) பாரதியார் பல்கலைக்கழகம்]**

14. **'கொலுவிருந்தாய்' - இச்சொல்லுக்குப் பொருத்தமான புணர்ச்சி விதி**

அ) இஈஐ வழி யவ்வும்

ஆ) முற்றும் அற்று ஒரோ வழி

இ) ஏனை உயிர்வழி வவ்வும், உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே

ஈ) உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்

**[இ) ஏனை உயிர்வழி வவ்வும், உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே]**

## குறுவினா

1. **தொழிலாளர்களின் கைகள் எதனைப் போலச் சிவந்துள்ளதாகக் கவிஞர் சிற்பி கூறுகிறார்?**
   - அந்திநேரத்து வானத்தில் படர்ந்துள்ள செக்கச்சிவந்த வண்ணம்போல உழைக்கும் தொழிலாளர்களின் கைகள் சிவந்துள்ளதாகக் கவிஞர் சிற்பி கூறுகிறார்.

2. **பழமைநலம் கொண்ட மொழி தமிழ்மொழி எவ்வாறு?**
   - தமிழ்மொழி பாண்டிய மன்னர்கள் அமைத்த சங்கத்திலே தன்னிகரற்ற செம்மொழியாய் இருந்து ஆட்சி செய்த மொழியாகும்.
   - பாரி போன்ற வள்ளல்கள் பலரை இத்தமிழ் மண்ணிற்குத் தந்த பழமை நலம் கொண்ட மொழியாகும்.

3. **கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் அவர்களின் ஆசை என்ன?**
   - தமிழ்மொழி பலப்பல புதிய உள்ளடக்கங்களால் தன்னைப் புதுப்பித்துக் கொள்ளவும் வேண்டும்; அதே நேரத்தில் பழஞ்சிறப்பைத் தக்க வைத்துக்கொள்ளவும் வேண்டும் என்பதே கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் அவர்களின் ஆசை ஆகும்.

4. **கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் எழுதிய கவிதை நூல்களில் சிலவற்றை எழுதுக.**
   - ஒளிப்பறவை, சர்ப்பயாகம், சூரியநிழல், ஒருகிராமத்து நதி, பூஜ்யங்களின் சங்கிலி.

5. **கவிஞர் சிற்பி குறிப்பிடும் முத்தமிழின் சிறப்புகள் யாவை?**
   - எங்களின் உள்ளத்தில் பொங்கிவரும் கவிதை வெறிக்கு உணவாக எப்பொழுதும் நீக்கமற நிறைந்தவள் தமிழ்மொழியே! தமிழ் வளர முச்சங்கம் வழி உதவியவளும், வள்ளல் பலரைத் தமிழ்நாட்டிற்குத் தந்தவளும் தமிழ்த்தாய் ஆவாள்.

6. **கவிஞர் சிற்பி எழுதியுள்ள உரைநடைநூல்கள் யாவை?**
   - இலக்கியச்சிந்தனைகள், மலையாளக்கவிதை, அலையும் சுவடும்.

## சிறுவினா

1. **தமிழ் அன்னை ஏன் சீறி வரவேண்டும் எனச் சிற்பி பாலசுப்பிரமணியம் விரும்புகிறார்?**

- உள்ளத்தில் பொங்கிவரும் உணர்வுகளை உணர்ச்சி மிகு கவிதையாக எழுத, முத்தமிழே நீ உதவிசெய்கின்றாய். நீ பாண்டிய மன்னர்கள் அமைத்த சங்கத்திலே, தன்னிகரற்ற செம்மொழியாய் இருந்து ஆட்சிச் செய்தவள்! பாரி போன்ற வள்ளல்கள் பலரை இத்தமிழ் மண்ணிற்குத் தந்து அழியாப் புகழ்பெற்றவள்.
- பண்டைய நாளிலிருந்த தமிழ் நலமும் தமிழ்நாட்டுப் பொதுமை நலமும் மீண்டும் இத்தமிழ் மண்ணில் பிறப்பதற்கு நீ குயில் போலக் கூவி வரவேண்டும். இன்று தமிழர்களைச் சூழ்ந்திருக்கும் அடிமைத்தனமும், அறியாமையும் முழுவதுமாக அவர்களை விட்டு அகன்றிட அவர்கள் சிறைப்பட்டிருக்கும் அடிமைத்தனக் கூட்டினை உடைத்திட, சிங்கம் போலச் சீறி நீ புறப்பட்டு வரவேண்டுமெனச் சிற்பி பாலசுப்பிரமணியம் கூறுகிறார்.

## நெடுவினா

1. **தமிழ்மொழி மீண்டும் சீறிவர வேண்டுமென்று கவிஞர் சிற்பி தமிழை அழைக்கும் காரணங்களைத் தொகுத்து எழுதுக.**

**இயற்கையைப் பாட வருக தமிழே!**

- மாலை நேரத்தில் சிவந்த கதிர்களைச் சுருக்கிக் கதிரவன் மலைக்குப் பின் சென்று மறைவான்.
- அம்மாலை நேர வானம் கதிரவனின் ஒளிபட்டுச் செந்நிறப் பூக்காடாகக் காட்சியளிக்கும்.
- அக்காட்சியைப் பாட தமிழே வா!

**தொழிலாளர்களைப் பாட வருக தமிழே!**

- தினமும் உழைக்கும் தொழிலாளர்கள் கைகள் மாலை நேர வானம் போலச் சிவந்திருக்கும்.
- தொழிலாளர்களின் திரண்ட தோள்களில் முத்துமுத்தாய் வியர்வை பூத்திருக்கும்.
- இக்காட்சிகளைப் பாடத் தமிழே நீ வா!

**தமிழின் பழமை நலம்:**

- பொங்கி வரும் கவிதைக்கு உணவாக விளங்குவது முத்தமிழாகும்.
- பாண்டியனின் ஆட்சிப் பகுதியான மதுரையில் சங்கம் அமைத்து அரசாட்சி செய்த சிறப்புடையது.
- பாரி போன்ற வள்ளல்களைத் தமிழ்நாட்டிற்குத் தந்த பெருமையுடையது.

**சிங்கம் போல சீறி வா:**

- பழமை நலம் மீண்டும் பிறக்க, மேனி சிலிர்க்கத் தமிழ்க் குயிலே மீண்டும் கூவி வா!
- குளிர்ச்சியான பொதிகை (குற்றால) மலையில் தோன்றிய தென்னாட்டுத் தமிழே! உன்னைப் புதுப்பிக்க புறப்பட்டு வா!
- தமிழரின் அடிமைத்தனமும், அறியாமையும் அகன்றிடவும், அவர்கள் சிறைப்பட்டிருக்கும் கூண்டினை உடைத்திட சிங்கம் போலச் சீற்றத்தோடு வா!

## இலக்கணக் குறிப்பு தருக.

**முத்தமிழ், தமிழ்க்குயில், குளிர்பொதிகை**

**முத்தமிழ்** - பண்புத்தொகை

**தமிழ்க்குயில்** - உருவகம்

**குளிர்பொதிகை** - வினைத்தொகை

## புணர்ச்சி விதி தருக.

**அவையெல்லாம், கொலுவிருந்தாய்**

**அவையெல்லாம்** - அவை + எல்லாம்

- 'இஈஐ வழி யவ்வும்' விதிப்படி அவை + ய் + எல்லாம்

- 'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' விதிப்படி அவையெல்லாம்

**கொலுவிருந்தாய்** - கொலு + இருந்தாய்

- 'ஏனை உயிர்வழி வவ்வும்' விதிப்படி கொலு + வ் + இருந்தாய்

- 'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' என்னும் விதிப்படி 'கொலுவிருந்தாய்'

## உறுப்பிலக்கணம் தருக.

**ஈன்று**

**ஈன்று** - **ஈன் + ற் + உ**

**ஈன்** - பகுதி

**ற்** - இறந்தகால இடைநிலை

**உ** - வினையெச்ச விகுதி

## விரிவானம்

## இயல் 1

## தம்பி நெல்லையப்பருக்கு

– பாரதியார்

## பலவுள் தெரிக.

1. **தமிழ்நாட்டில் வீதி தோறும் இருக்க வேண்டியது எஃது எனப் பாரதியார் விரும்புகிறார்.**

அ) ஆலயம் ஆ) தொழிற்சாலை

இ) பள்ளிக்கூடம் ஈ) இவற்றில் எதுமில்லை

**[இ) பள்ளிக்கூடம்]**

2. **'வம்சமணி தீபிகை' என்னும் நூலை எழுதியவர்**

அ) பாரதியார் ஆ) கவிகேசரி சாமி தீட்சிதர்

இ) இளசைமணி ஈ) பரலி சு. நெல்லையப்பர்

**[ஆ) கவிகேசரி சாமி தீட்சிதர்]**

3. **பாரதியார் நெல்லையப்பருக்கு எழுதிய கடிதங்களைப் பதிப்பித்தவர்**

அ) இளசைமணி ஆ) ரா.அ.பத்மநாபன்

இ) கி.ராஜநாராயணன் ஈ) கவிகேசரி சாமி தீட்சிதர்

**[ஆ) ரா.அ.பத்மநாபன்]**

4. **பரலி சு. நெல்லையப்பர் பாரதியாரை விட எத்தனை ஆண்டுக்கு இளையவர்**

அ) ஏழாண்டுகள் ஆ) ஏழரை ஆண்டுகள்

இ) ஒன்பதாண்டுகள் ஈ) எட்டாண்டுகள்

**[அ) ஏழாண்டுகள்]**

5. **தேசபக்தன் இதழின் துணையாசிரியர்**

அ) பாரதியார் ஆ) பரலி சு. நெல்லையப்பர்

இ) இளசைமணி ஈ) சுப்பிரமணிய சிவா

**[ஆ) பரலி சு. நெல்லையப்பர்]**

6. **பாரதியார் நடத்திய இதழ்கள்**

அ) சூரியோதயம், தேசபக்தன்

ஆ) சூரியோதயம், நெல்லைத்தென்றல்

இ) லோகோபகாரி, கர்மயோகி

ஈ) சூரியோதயம், கர்மயோகி

**[ஈ) சூரியோதயம், கர்மயோகி]**

## கருத்து சரியா? தவறா?

1. **கருத்து 1 : பாரதி, தான் கல்வி கற்க உதவி வேண்டி எட்டயபுரம் அரசருக்குக் கவிதைக் கடிதம் எழுதினார்.**

**கருத்து 2 : பாரதி, தன் கவிதைக் கடிதத்தைப் பதினாறு வயதில் எழுதவில்லை.**

அ) இரண்டு கருத்தும் சரி ஆ) கருத்து 1 தவறு, 2 சரி

இ) கருத்து 1 சரி, 2 தவறு ஈ) இரண்டு கருத்தும் தவறு **[அ) இரண்டு கருத்தும் சரி]**

2. **கருத்து 1 : ஆணும் பெண்ணும் ஒருயிரின் இரண்டு தலைகள் என்றார் பாரதி.**

**கருத்து 2 : பரலி சு. நெல்லையப்பர் பாரதியின் பாப்பாப்பாட்டைப் பதிப்பித்தவர்.**

அ) இரண்டு கருத்தும் தவறு ஆ) இரண்டு கருத்தும் சரி

இ) கருத்து 1 தவறு, 2 சரி ஈ) கருத்து 1 சரி, 2 தவறு **[ஈ) கருத்து 1 சரி, 2 தவறு]**

## சரியானதைத் தேர்க.

1. **அ) முரசுப்பாட்டு** - சு.நெல்லையப்பர்

**ஆ) நெல்லைத்தென்றல்** - பாரதியார்

**இ) பாரதி கடிதங்கள்** - ரா.அ.பத்மநாபன்

**ஈ) சு.நெல்லையப்பர்** - வம்சமணி தீபிகை

**[இ) பாரதி கடிதங்கள் - ரா.அ.பத்மநாபன்]**

2. **அ) கவிகேசரி சாமி தீட்சிதர்** -பாரதி கடிதங்கள்

**ஆ) இளசைமணி** - வம்சமணி தீபிகை

**இ) கண்ணன்பாட்டு** -ரா.அ.பத்மநாபன்

**ஈ) வ.உ.சிதம்பரனாரின் வாழ்க்கை வரலாறு** -சு.நெல்லையப்பர்

**[ஈ) வ.உ.சிதம்பரனாரின் வாழ்க்கை வரலாறு - சு.நெல்லையப்பர்]**

## பொருந்தாததைத் தேர்க.

1. **அ) இளசைமணி** -வம்சமணி தீபிகை நூலின் மறுபதிப்பு
   **ஆ) வம்சமணி தீபிகை** - கவிகேசரி சாமி தீட்சிதர்
   **இ) பரலி சு. நெல்லையப்பர்** -ஆசிரியர்
   **ஈ) பாரதி வாழ்த்து** -பரலி சு.நெல்லையப்பர் **[இ) பரலி சு. நெல்லையப்பர் - ஆசிரியர்]**

---

## பொருத்துக.

1. **அ) வம்சமணி தீபிகை** -1. சு.நெல்லையப்பர்
   **ஆ) பாரதி கடிதங்கள்** -2. லோகோபகாரி
   **இ) நெல்லைத்தென்றல்** - 3. ரா.அ.பத்மநாபன்
   **ஈ) சு.நெல்லையப்பர்** -4. கவிகேசரி சாமி தீட்சிதர்

   அ) 4 3 2 1 ஆ) 4 3 1 2 இ) 4 2 3 1 ஈ) 4 1 3 2 **[ஆ) 4 3 1 2]**

---

## நூல்வெளி

மகாகவி பாரதி நெல்லையப்பருக்கு எழுதிய இக்கடிதம் ரா.அ.பத்மநாபன் பதிப்பித்த 'பாரதி கடிதங்கள்' என்னும் நூலில் இடம்பெற்றிருக்கிறது. பாரதி, பதினைந்து வயதில் கல்விகற்க உதவிவேண்டி எட்டயபுரம் அரசருக்கு எழுதிய கவிதைக் கடிதம் முதல், அவர்தம் மறைவிற்கு முன்னர் குத்திகேசவருக்கு எழுதிய கடிதம்வரை அனைத்தும் நம்மிடம் பேசுவதுபோல இருப்பதே அவருடைய நடையழகின் சிறப்பு. பாரதியாரைவிட ஏழாண்டுகள் இளையவரான பரலி சு.நெல்லையப்பரைப் பாரதி தன்னுடைய அருமைத் தம்பியாகவே கருதி அன்புகாட்டி வந்தார். பாரதியின் கடிதங்கள் மேலும் அவரை நன்றாகப் புரிந்துகொள்ளத் துணை புரிகின்றன.

---

## எட்டயபுர ஜமீனுக்குப் பாரதி எழுதிய கவிதைக் கடிதம்

ஐயநின் அருளே அருங்கதி யென்ன
உய்ய இவண்வந் துற்று என் தந்தையார்
என்னையும் புறமொழிகற்க வென்றி யம்புவர்
என்னை யான் செய்குவ தின்றமிழ் கற்பினோ
பின்னை ஒருவரும் பேணார் ஆதலின்
கன்ன யான் அம்மொழி கற்கத் துணிந்தனன்;எனினும்
கைப்பொருள் அற்றான் கற்ப தெவ்வகை?

# இனிக்கும் இலக்கணம்

## இயல் 1

## தமிழாய் எழுதுவோம்

### பலவுள் தெரிக.

1. **வேற்றுமைப் புணர்ச்சியில் லகரத்தைத் தொடர்ந்து வல்லினம் வரின் லகரம் எவ்வாறு திரியும்.**

அ) இயல்பாகப் புணரும் ஆ) லகரம் டகரமாகும்
இ) லகரம் னகரமாகும் ஈ) லகரம் றகரமாகும்

**[ஈ) லகரம் றகரமாகும்]**

2. **வேற்றுமைப் புணர்ச்சியில் ளகரத்தைத் தொடர்ந்து மெல்லினம் வரின் ளகரம் எவ்வாறு திரியும்.**

அ) ளகரம் லகரமாகும் ஆ) ளகரம் னகரமாகும்
இ) ளகரம் டகரமாகும் ஈ) இவற்றில் ஏதுவுமில்லை

**[ஈ) இவற்றில் ஏதுவுமில்லை]**

3. **உயிர்மெய்க்குறில் எழுத்துகள் எத்தனை?**

அ) 18 ஆ) 90
இ) 30 ஈ) 126 **[ஆ) 90]**

4. **மயங்கொலி எழுத்துகளுள் சொல்லின் இறுதியில் வராத மெய்யெழுத்து**

அ) ன் ஆ) ர் இ) ற் ஈ) ழ் **[இ) ற்]**

5. **கூற்று 1** : ஆய்த எழுத்து சொல்லின் இடையிலும் இறுதியிலும் வரும்.

**கூற்று 2** : ஆய்த எழுத்து தனிக்குறிலையடுத்து வரும்.

அ) கூற்று 1 மட்டும் சரி
ஆ) கூற்று 2 மட்டும் சரி
இ) கூற்று 1 தவறு 2 தவறு
ஈ) கூற்று 1 தவறு 2 சரி

**[ஈ) கூற்று 1 தவறு 2 சரி]**

6. **ஈரொற்றாய் வரும் மெய்கள்**

அ) க், ங் ஆ) ஞ், ந், வ்
இ) ய், ர், ழ் ஈ) ல், ள் **[இ) ய், ர், ழ்]**

### குறுவினா

1. **ஒரு, இரு என்பவை ஓர், ஈர் என எப்போது மாறும்?**
   - வருமொழி முதலில் உயிர்வரின் ஒரு, இரு என்பன முறையே ஓர், ஈர் என மாறும்.

2. **இயக்குநர், இயக்குனர் - எது சரியான சொல்? உரிய இலக்கணத்தோடு விளக்குக.**
   - இயக்கு என்னும் வினையானது பெயரிடை நிலையான 'ந்' என்பதைப் பெற்று (இயக்கு + ந் + அர்) இயக்குநர் என்றாகும்.
   - இயக்குநர் என்பதே சரியான சொல்லாகும்.

விழித்துக் கொண்டிருக்கும் நேரமெல்லாம்
படித்துக் கொண்டிருப்போம்

## எமது வெளியீடுகள் (STATE BOARD)

- 6th to 12th Std - **STEP TO SUCCESS ENGLISH**
- 10th to 12th Std - **ELITE ENGLISH**
- 6th to 12th Std - **உன்னால் முடியும் தமிழ்**
- 10th to 12th Std - **அமுத சுரபி தமிழ்**
- 6th to 10th Std - **சமூகஅறிவியல்** (Tamil & English Medium)
- 8th to 10th Std - **அறிவியல்** (Tamil & English Medium)

**டால்பின் பப்ளிகேசன்ஸ்®**

239, கீழப்பட்டித்தெரு, ஸ்ரீவில்லிபுத்தூர் - 626 125, விருதுநகர் மாவட்டம். த.நா.

**Cell : 98653 06197 / 89256 77710 / 99435 67646**
**93453 14146 / 93453 30937**

Mail us : dolphin.pub2005@gmail.com | Visit us : www.kalvidolphin.com

Karur Vysya Bank
DOLPHIN PUBLICATIONS
SCAN & PAY WITH ANY UPI APP
wlpos.2753796a@kvb
TID: 2753796A
KVB_3459

ICICI Bank iMobile
Merchant Name: DOLPHIN PUBLICATIONS
Mobile Number : 8668163362
Steps to Pay UPI QR Code
Open UPI app > Select Tap to Pay > Scan QR Code > Enter Amount

G Pay **63743 17883**

CITY UNION BANK
DOLPHIN PUBLICATIONS
MID: E01020101079104
SCAN & PAY
UPI ID:CFST20003166@CUB
328:SRIVILLIPUTHUR